தொழில் வழிகாட்டல் கல்வி மற்றும் தகவல் சஞ்சிகை

# ஹரசர



## இதழ் 41 - 2020

*மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் வெளியீடு*

*(இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பத்திரிகை)*

வெளியீடு : மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

பலன் தரக்கூடிய மரங்கள் மீது
இருந்து இஷ்டம்போல் காய் கனிகளை
ருசிக்கின்ற பறவை போல்
அனைவரையும்
அறிவு நிறைந்த பாதைக்கு இட்டுச் செல்ல
உலகை வெல்ல
உங்களது பார்வையை செலுத்துங்கள்
நற்குணங்களின் பண்புகளை அனுபவியுங்கள்

- எரந்ததி ரந்தெனிய -



# உள்ளடக்கம்




1. செயற்கை நுண்ணறிவும் எமது எதிர்காலமும்



2. உங்களது பிள்ளையின் தொடர்பாடல் திறனை விருத்தி செய்வது எப்படி?



3. உங்களது தொடர்பாடல் வலையமைப்பை விருத்தி செய்து கொள்ளுங்கள்



4. உங்களை அடையாளம் காண்பதற்கு உதவிடும் மூளையின் திறப்புப் பரிசோதனை (Brain Key)



5. தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட எமது இளம் தொழில் முயற்சியாளர்



6. சுயகௌரவம் மற்றும் சுய மதிப்பு என்பவற்றைச் சீர் செய்தல்



7. புதிய தொழில்நுட்பம், இளம் ஆற்றலுடன் இணைத்த எமது நெல் விவசாயி



8. நீங்கள் ஜப்பானில் தொழில் வாய்ப்புப் பெற விரும்புகின்றீர்களா?



9. இளங்கலை இசை முதுகலை தேர்வினை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய கலாநிதி பிரேமதாச முதுன்கொட்டுவ



**ஆலோசனை :**
**அனுஷா கோகுல பிரணாந்து**
பணிப்பாளர் நாயகம்
மனித வலு மற்றும்
வேலைவாய்ப்புத் திணைக்களம்

**நிர்வாகம் :**
**சட்டத்தரணி எம்.ஜீ.கிரிக்ஷாந்தி தீபக்ஷிகா**
உதவிப் பணிப்பாளர்

**டீ.எம்.எஸ்.ஆர்.ரீ. திஸாநாயக**
**உதவிப் பணிப்பாளர்**
தொழில் உருவாக்க விருத்தி மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு
மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களம்

**ஆசிரியர் :**
**எரந்ததீ ரன்தெனிய**
தொழில் வழிகாட்டல் அதிகாரி

**அட்டைப் பட வடிவமைப்பு :**
**அமா ஜோசப்**

**உள்ளட்டைப் பட வடிவமைப்பு :**
**ரனுதி தினெத்யா ஹங்சனி**

**வெளியீடு :**
**தொழில் உருவாக்க விருத்தி மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு**
**மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களம்**
**இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு**

**பக்க வடிவமைப்பு :**
**செலசினே தொலைக்காட்சி நிறுவனம்**
**இல. 224**
**பௌத்தாலோக மாவத்தை**
**கொழும்பு - 07**

**ISSN 1391-622x**



# 01. ஆசிரியர் கருத்து!

தொடர்ந்தும் 20 வருடங்களாக ஹசர தொழில் வழிகாட்டல் கல்வி மற்றும் தகவல் சஞ்சிகையை உங்களிடத்தில் எடுத்துவரும் மனிதலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் தொழில் வழிகாட்டல் பிரிவு இம்முறை ஹசர 40 ஆவது இதழை உங்களிடம் சமர்ப்பிக்கின்றது.

இப்பிரிவு 2000 ஆம் ஆண்டில் ஹசர கன்னி இதழை வெளியிட்டது முதல் 2020 ஆம் ஆண்டில் அதன் 40 ஆவது இதழ் வெளிவரும் வரை வாசகர்களாகிய உங்களுடன் தொடராக இருக்கின்றது. இதுவரை நாம் வந்த பாதை என்பது, இலங்கையைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளின் தொழிலின்மையைக் குறைத்து அவர்களின் கல்வி, தொழிற்கல்வி மற்றும் தொழில் இலக்குகளை அடைந்துகொள்ளத் தேவையான அறிவு, திறன் மற்றும் நேர் சிந்தனைகள் என்பவற்றை அவர்களுக்கு வழங்குவதாகவே அமைந்திருந்தது.

இதனூடாக, அவர்களைப் பலப்படுத்துவதற்கு ஹசர கல்வி மற்றும் தகவல் சஞ்சிகை எப்போதும் தன்னை அர்ப்பணித்துள்ளதுடன் அதற்காக பங்களிப்புச் செய்யும் சகலரையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கின்ற தொற்றுநோய் நிலைமைகளுக்கு மத்தியிலும் சளைக்காமல் தனது ஜீவனோபாய தொழிலை நடாத்திக் கொண்டு, அதற்காக உரிய முறையில் செயற்பட்டு இளமைப் பருவத்தை அனுபவிப்பதற்காக வழிகாட்டல்களை வழங்கி உங்களுக்கு உதவி புரிவது எமது எதிர்பார்ப்பாகும்.

இம்முறை 40 ஆவது ஹசர இதழில் நாம் உங்களுக்காக எடுத்து வருவதும் இதுபோன்ற பலமொன்றைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான ஓர் உந்துதலையே ஆகும்.

பொருளாதாரத்தில் எந்தவிதமான வீழ்ச்சி ஏற்பட்டாலும், இயற்கைக்கு கரிசனை செலுத்தி, புதிய கண்டுபிடிப்புக்களை ஏற்படுத்துவதற்கும், புதிய வருமான வழிகளைத் திறந்து விடுவதற்கும், இளைஞர் யுவதிகள் முன்னெடுக்கின்ற முயற்சிகள் சமகாலத்தில் தெளிவாக காணக் கூடிய ஒரு மாற்றம் ஆகும். இந்த நேரான உணர்வுகளை தொடர்ந்தும் வளர்ச்சியடையச் செய்து அதற்காக வேண்டி உட்சாகமூட்டுவதற்கு ஹசர எப்போதும் கைகோர்த்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறது.

புதிய உலகில் புதிய பாதைகளைத் திறக்கச் செய்து இணையத்தில் இணைந்துகொள்ளும் ஹசர 40 ஆவது இதழ் தொடர்பில் உங்களது கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் கௌரவத்துடன் கேட்டுக் கொள்கிறோம்.

**எரந்ததீ ரந்தெனிய**
தொழில் வழிகாட்டல் அதிகாரி,
மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

# 02. செயற்கை நுண்ணறிவும் எமது எதிர்காலமும்

செயற்கை நுண்ணறிவு என்பதை நான்காவது கைத்தொழில் புரட்சியின் ஒரு பகுதியாக அடையாளப்படுத்த முடியும். இந்த தொழில்நுட்பத்துடன் கைகோர்த்த "3D ரொபோட்டிக்ஸ்" என்பது இயந்திரக் கற்றல் என்ற பெயரிலான ஒரு இயந்திரமாகும். இந்த இயந்திரம் இன்னொரு இயந்திரத்தோடு கற்றுக் கொடுத்தல் அல்லது அந்த இயந்திரமே சுயமாக கற்றல் மற்றும் IOT. தொழில்நுட்பம் (Internet of Thinks) போன்ற துறைகளை அறிமுகம் செய்கின்றது.

நுண்ணறிவென்பது முறைசார் அல்லது முறைசாரா கல்வியினூடாக பெற்றுக் கொள்ளும் அறிவையும் அனுபவம் மற்றும் புரிந்துணர்வு என்பவற்றினால் பெற்றுக் கொள்கின்ற அறிவையும் பயன்படுத்தி தர்க்க ரீதியாக ஏதாவதொரு பிரச்சினைக்கு சார்பான விடையொன்றைப் பெற்றுக் கொடுக்கும் திறனைக் குறிக்கின்றது.

அவ்வாறெனின், இங்கு தன்னால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற சகல வழிமுறைகளினூடாகவும் அறிவைப் பயன்படுத்தி ஏதாவதொரு பிரச்சினைக்கு தர்க்க ரீதியாக சிந்தித்து ஒரு தீர்மானத்துக்கு வருவது அல்லது எதிர்காலத்தில் நிகழவுள்ள ஒரு விடயம் பற்றி சரியான முறையில் அனுமானிப்பது ஆகும்.

நுண்ணறிவென்பதற்கு கணிதவியல் மற்றும் தர்க்கவியல் சார்ந்த அறிவு மாத்திரம்தான் என ஆரம்ப காலத்தில் வியாக்கியானம் கூறப்பட்டது. பிற்காலத்தில் ஹொவாட் காட்ஹர் அவர்களின் பல் அறிவுக் கொள்கை உலகிற்கு அறிமுகம் செய்யப்பட்டதன் பின்னர் சூழலியல் அறிவு, சங்கீத அறிவு, மொழியியல் அறிவு, மானிடரிடை அறிவு ஆகியபோன்ற இன்னும் பல்வேறு அறிவு வகைகள் உலகிற்கு அறிமுகமாகியுள்ளன.

உயிர்களிடத்தில் காணப்படும் அறிவியல் திறனை இயந்திரமொன்றுக்கு வழங்க முடியும் என 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் மனிதனின் சிந்தனையில் உதிக்காத போதும், 2010 இன் பின்னர் மனிதன் இயந்திரமொன்றுக்கு சிந்திக்கும் ஆற்றலை வழங்குவது தொடர்பில் ஆய்வு செய்ய ஆரம்பித்தான். இதுவே கணனிக்கு சிந்திக்கும் திறனை வழங்க ஏதுவாகியது.

நினைவாற்றலைப் பொருத்தவரையில் கணனியானது மனிதனை விட ஒப்பீட்டளவில் அதி உயர் நிலையில் காணப்படுகின்றது. உலகில் காணப்படுகின்ற உயர் தரமான புத்திக் கூர்மையான மனிதனை விடவும் தகவல்களையும் தரவுகளையும் அக்கணனியில் சேமித்து வைக்க முடிகின்றது. அவ்வாறே, மனிதனை விட விரைவாக அதனை வெளிக்கொணரும் திறனும் கணனியிடம் உள்ளது.

இருப்பினும், இந்தத் தரவுகளைப் பயன்படுத்தி தர்க்க ரீதியாக சிந்தித்து தீர்மானம் எடுக்கும் திறன் கணனிக்கு இல்லை. மேலும் சமூகம், பொருளாதாரம், கலாசாரம் என்பவற்றுக்கு ஏற்ப நடைமுறைச் சாத்தியமான விதத்தில் தீர்மானங்களை எடுக்கும் திறன் செயற்கை அறிவுள்ள இக்கணனிக்கு கிடையாது.

என்றாலும், சிற்சில நடவடிக்கைகள் தொடர்பில் கணனிக்கு தரவுகளை வழங்கி சிந்திக்கின்ற ஒரு திறனை ஏற்படுத்துவதன் ஊடாக அறிவியல் ரீதியான பெருமானமொன்றை அதற்கு வழங்குவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இங்கு V.I. (செயற்கை நுண்ணறிவு) அல்லது செயற்கை அறிவை நடைமுறையில் பயன்படுத்தும் பல்வேறு துறைகள் தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இருப்பினும், எதிர்காலத்தில் இந்தத் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் மனித அறிவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பல்வேறு நடவடிக்கைகளை இயந்திரமொன்றிடம் ஒப்படைப்பதற்கு உலகிற்கு முடியுமாக இருக்கும். நிகழ்காலத்திலும் கூட செயற்கைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படுகின்ற துறைகள் பலவற்றை அறிமுகம் செய்ய முடியுமாகவுள்ளது.

## வணிகத்தைத் தானியங்கி இயந்திரமயப்படுத்தல் (Business Automation)

நாம் இதனை உதாரணம் ஒன்றின் மூலம் தெளிவுபடுத்திக் கொள்வோம். ஏதாவதொரு நிறுவனத்துக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான சுயவிபரக் கோவைகள் ஆயிரக் கணக்கில் கிடைக்கப் பெற்றால், அவற்றிலிருந்து சரியான நபரைத் தெரிவு செய்வது மனிதர் ஒருவரால் சிரமமான ஒன்றாகும். இருப்பினும், தேவையான நியம விதிகளை வழங்கி பின்னர் தரவுகளை வழங்குவதனூடாக மிகக் குறுகிய நேரத்தில் சரியான விண்ணப்பதாரரை தெரிவு செய்து கொள்வதற்கு V.I. தொழில்நுட்பத்தின் மூலம் முடிகின்றது.
அதேபோன்று, இதுமாதிரியான ஒரு நடவடிக்கையாக ரொபோடிக்ஸ் தொழில்நுட்பம் இலங்கையில் பயன்படுத்தப்படுகின்றது என்பதற்கான சிறந்த உதாரணமாக, ஒரு வங்கியில் காசோலை வைப்புச் செய்வதற்கான நடவடிக்கையை அடையாளம் காட்டலாம். இங்கு மிகச் சரியான செயற்பாடு, வேகம் மற்றும் குறைந்த பணியாட்களைப் பயன்படுத்தி மிகச் சிறந்த வினைத்திறன் மிக்க சேவையைப் பெற்றுக் கொடுத்தல் என்பன சாதகமான ஒன்றாக கொள்ளப்படுகிறது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இதற்காக வேண்டி "App பிரதிநிதிகள்" நியமிக்கப்பட்டுள்ளதுடன் வங்கி அழைப்புக்களுக்கான வரவேற்பு அல்லது பொது மக்களுக்கான தகவல் பெற்றுக் கொள்ளும் சேவை என்பவற்றுக்கும் இந்த App களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.
இதன்போது, கணனியின் திரையிலுள்ள ஒருவர் உங்களுக்குப் பதிலளிப்பார். உங்களது கேள்விகளுக்கு கணனியானது ஒரு மனிதனைப் போன்றே பதில்களை வழங்குவதுடன் மேலதிகத் தகவல்களுக்கு உரிய அதிகாரிகளை தொடர்பு கொள்ளுமாறும் ஆலோசனை வழங்குகிறது. பெரும்பாலும் "Call Center" இந்த முறைமை பயன்படுத்தப்படுகின்றது.



## களிப்பூட்டல் நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுக்கள்

A.I. தொழில்நுட்பம் களிப்பூட்டல் நிகழ்ச்சிகளுக்காகவும் சமகாலத்தில் அதிகபட்சமாக பயன்படுத்தப்படுகின்றது. சிறு பிள்ளைகளுக்கு கதை சொல்லுவது முதல் "செஸ்" போன்ற விளையாட்டுக்களுக்கும் தாம் விரும்புகின்ற பாடல்களைக் கேட்டு மகிழ்வதற்கும் தனது உணர்வுகளைப் பரிமாறிக் கொள்வதற்குமான ரொபோக்களும் கூட இந்த தொழில்நுட்பத்தினூடாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

## சுகாதாரம்

கிடைக்கப் பெறுகின்ற தரவுகளைப் பயன்படுத்தி எதிர்கா லத்தில் ஏற்படப் போகின்ற நோய்கள் மற்றும் அவற்றுக் காக முன்னெடுக்கப்பட வேண்டிய சிகிச்சை முறைகள் பலவற்றை கண்டறியவும் இன்று இந்தத் தொழில்நுட்பம் சுகாதாரத் துறையில் பயன்படுத்தப்படுகின்றது.

## பாதுகாப்பு

உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள் தனது பாதுகாப்புக்காக செயற்கை அறிவைக் கொண்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது வெளிப்படையான ஒரு விடயமாகும். குறிப்பாக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தத் தொழில்நுட்பம் மிகச் சிறந்த ஓர் ஆயுதமாகும். உங்களது FB கணக்கில் உள்ள சகல தகவல்களையும் FB நிறுவனத்துக்குப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. அத்துடன், உங்களது இனம், மதம், விருப்புக்கள், அரசியல் கருத்து போன்ற பல்வேறு தகவல்கள் தற்போதுகூட அவர்களிடம் காணப்படுகின்றன.
தனக்குத் தேவையானதைத் தெரிவு செய்து கொடுத்தல் நீங்கள் எப்போதாவது ஒருநாள் Amazon, Alibaba போன்ற நிறுவனம் ஒன்றிலிருந்து இணையத்தினூடாக ஏதாவதொரு பொருளை கொள்வனவு செய்துள்ளீர்களாயின், அதற்கு சமனான பொருட்களை அந்த நிறுவனம் உங்களுக்கு திரும்பத் திரும்ப காட்சிப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வது இந்த A.I தொழில்நுட்பத்தினூடாகவாகும்.



நீங்கள் இணையத்தினூடாக ஒரு முறை பார்த்த விதத்தினாலான வீடியோ காட்சியை மீண்டும் மீண்டும் உங்களுக்கு தெரிவு செய்து தருவது இந்த தொழில்நுட்பமாகும். உங்களது முன்னைய நடவடிக்கைகள் தொடர்பில் தேடியறிந்து அவற்றை முன்வைப்பதற்கு செயற்கையான அறிவு கொண்ட இந்த இயந்திரத்துக்கு முடியுமாகவுள்ளது.
வங்கியொன்றில் நிலையான வைப்பொன்று காணப்படுமாயின் அதில் முன்னெடுக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக, உங்களுக்கான மாற்று வழிகளை இந்தத் தொழில்நுட்பத்தினூடாக பெற்றுக் கொள்ள முடிகின்றது. இந்த முறைமையை சந்தை வாய்ப்பை அதிகரித்துக் கொள்வதற்காகவும் பயன்படுத்த முடிகின்றது.

## தகவல்களின் உண்மைத் தன்மை

சரியான தகவலை சரியான நேரத்தில் சரியான முறையில் உங்களுக்கு வழங்குவதற்கு இந்த A.I. தொழில்நுட்பத்துக்கு முடிகின்றது. உதாரணமாக, கூகுல் வரைபடத்தினூடாக எந்தவொரு இடத்தினையும் சரியாக அடையாளம் கண்டுகொள்ள முடிவதனைக் குறிப்பிடலாம்.
அதேபோன்று, A.I தொழில்நுட்பக் கருவியை வீட்டிலுள்ள CCTV கெமெரா மற்றும் மைக்ரோவேவன் போன்ற உபகரணங்களுடன் தொடர்புபடுத்தும் போது அதன் மூலம் சரியான தகவலைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. தொலைக்கா ட்சியில் நீங்கள் விரும்பிய அலைவரிசையைப் பார்ப்பதற்கும் இந்த A.I தொழில்நுட்பம் உதவிபுரிகின்றது.

## A.I தொழில்நுட்பத்துடனான மானிட தொடர்பு வேகம் அதிகரிப்பு

சமகாலத்தில் அதிக வேலைப்பழுவுள்ள மனிதன் கணனியுடன் அதிக தொடர்புகளைக் கொண்டிருப்பதனைக் காண முடிகின்றது. இதன்காரணமாக கணனியும் மானிடத் தொடர்புகளை முன்னெடுப்பதற்கு தேவையான தொழில்நுட்பத்தை A.I யிடமிருந்து பெற்றுள்ளது.

நீங்கள் ஏதாவது ஒரு பொருளைக் கொள்வனவு செய்வதற்காக "செட்" செய்ய நேரிட்டால் அதற்கான பதிலை வழங்குவது ஒரு மனிதர் அல்ல. மாறாக, ஓர் இயந்திரமே என்பதை சிலபோது நீங்கள் அறியாதவர்களாக இருக்கலாம்.
இன்று தனது குடும்பத்தைவிட்டும் தூரமாகி தனியாக வாழும் மனிதர்களின் தனிமையைப் போக்கக் கூடிய ஒரு மனிதத் தோற்றத்தில் பதிலளிக்கக் கூடிய ரொபோக்கள் உற்பத்தியாகியுள்ளன. அதேபோன்று, அதிக வேலைப்பழுவுடன்கூடிய மனிதர்களின் உள ஆரோக்கியத்தை வழங்கக் கூடிய விதத்தில் தன்னை அன்புடன் வரவேற்கும் ரொபோ பொம்மைகள் தற்காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.



இதுபோன்ற தொழில்நுட்பத்துடன் முன்னோக்கிச் செல்லும் இளைஞர்களாகிய உங்களுக்கு இதில் உருவாகும் தொழில் வாய்ப்புக்கள் அதிகம். ஆக்கபூர்வமாக சிந்தித்தால், தற்பொழுது உலகில் தடையில்லாத விதத்தில் அதிகமான தொழில்வாய்ப்புக்களை புதிதாக தோற்றுவித்துக் கொள்ள உங்களுக்கு பாரிய வாய்ப்பொன்று உதயமாகியுள்ளது. இது மிகவும் வரையறுக்கப்பட்டதாகும்.

இதனால், இதுபோன்ற துறைகள் தொடர்பில் ஆழமாக சிந்தித்து கல்வியைப் பெற்றுக் கொள்வது இளைஞர்களாகிய உங்களது பணியாகும். இருப்பினும், செயற்கை அறிவுள்ள அதி நவீன தொழில்நுட்பத்துடன் செயற்படும் உங்களுக்கு முகம்கொடுக்கவுள்ள சவால்கள் ஏராளம்.

புதிய தொழில்கள் உருவாவது போன்று தற்பொழுது உலகில் காணப்படும் தொழில்கள், உலகிலிருந்து நீக்கப்படுவதும் இந்த தொழில்நுட்பத்தினூடாக நிகழ்கின்றது. இதனால், உங்களது தொழில்துறைக்கான கல்வி முன்னெடுக்கப்பட வேண்டியது எந்த நோக்கில் என்பதை நீங்கள் சிந்தனை செய்ய வேண்டியுள்ளது.

செயற்கை அறிவை நேரடியாக பிரயோகிக்க முடியுமான கணக்கியல் போன்ற பாடத்துறை, இயந்திர உபகரண பயன்பாட்டுக்கான வாய்ப்பை செயற்கை அறிவினால் நேரடியாக செய்துகொள்ள சந்தர்ப்பம் அளிக்கின்றது. இதற்கான காரணம், சரியானதும் விரைவானதும் என்ற அடிப்படையில் பார்க்கும் போது செயற்கை அறிவு மனித அறிவை மிஞ்சியதாக காணப்படுகின்றது என்பதாகும்.

அதேபோன்று, இராணுவத்தினரின் செயற்பாடுகள், குண்டு செயலிழக்கச் செய்தல் போன்ற நடவடிக்கைகள் ரொபோ தொழில்நுட்பத்தின் ஊடாக மனிதர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் முன்னெடுக்க முடியுமாகவுள்ளது. இதிலுள்ள மற்றுமொரு பகுதி என்னவெனில், செயற்கை அறிவுக்கு ஏற்ற செயற்பாடுகள் உலகில் அதிகரித்திருக்கின்ற போது, அது தொடர்பான புதிய சட்ட ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது என்பதாகும்.

எது இயற்கையானது? எது செயற்கையானது? என்பது குறித்து மனிதன் வரைவிலக்கணப்படுத்த வேண்டிய தேவை எழும். உதாரணமாக, தனது உடல் உறுப்புக்களை 3D தொழில்நுட்பத்தின் ஊடாக சிறந்த நிலையில் ஏற்படுத்திக் கொள்ள முடியுமாயின், அது இயற்கையானது என்பது கேள்விக்குரியது.

உதாரணமாக, ஒரு விளையாட்டு வீரனுக்கு ஒரு காலை 3D தொழில்நுட்பத்தின் ஊடாக உருவாக்கிக் கொள்ளலாம். ஒருவருடைய தனித்துவங்களில் தாக்கம் செலுத்தக்கூடிய பல விடயங்களை இதனூடாக மாற்ற முடியுமாயின் அது அழிவை ஏற்படுத்தும் நிலைமைகளை தோற்றுவிக்கக்கூடும்.

அதேபோன்று, ரொபோக்களும் மனிதர்களும் ஒரே தொழிற்சாலையில் பணியாற்றுவதாயின் அவர்களுக்கான சட்ட ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட வேண்டியிருக்கும். மூளை தொழிற்படும் விதம் குறித்து மனிதர்கள் கண்டறிந்த போது, அன்பு போன்ற மனித உணர்வைக் கூட மாற்றம் செய்ய முடியும் என கண்டறிவார்களாயின் அதனை ஒரு ஆயுதமாக தமது சுயலாபத்துக்கு பிரயோகிக்க முற்படலாம். அது உலகிலுள்ள சமயங்களுக்கு ஒரு சவாலாக கூட மாறலாம்.

இதன்படி, செயற்கை அறிவானது உலகிற்கு மிகவும் பயன்பாடுடையது போன்று, நிலையானதொரு அபிவிருத்தியை வேகமாக அடைந்துகொள்வதற்கு உயர் தரத்திலுள்ள ஒன்றாகவும் காணப்படுகின்றது.

இதன் செயற்பாட்டு வேகம், சரியான கணிப்பு என்பவற்றைப் பயன்படுத்தி புதிய படைப்புக்களை ஏற்படுத்துவது இளம் தலைமுறையினரது பணியாகும். அப்படியிருப்பினும், மனிதனின் பகுத்தறிவை கணனியொன்றுக்கு முழுமையாக ஒப்படைப்பதென்பது பொருத்தமற்ற செயலாகும்.

இதுபோன்ற தொழில்நுட்பத்துடன் மாத்திரம் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்வது மனிதனின் ஞாபக சக்தியைப் பலவீனப்படுத்துவதற்கும் ஒரு காரணியாக அமையலாம். இவற்றுக்கு பழக்கப்படுத்திக் கொள்வதன் மூலம் உங்களுக்கு உங்களுடைய செயற்பாட்டு வேகம் மறந்துபோகக் கூடும். சிந்தித்துப் பாருங்கள். கூகுல் வரைபடம் மூலம் பாதை தேடிப் பயணித்தால், அந்தப் பாதை உங்களது நினைவில் வரையப்படுவதில்லை என்பது உங்களுக்கு விளங்கும். அதேபோன்று, கூகுல் வரைபடம் தேடித் தந்த பாதையை விடவும் நீங்களாக அறிந்துகொள்ளும் மாற்றுப் பாதையானது ஒரு நாள் உங்களது நினைவுக்கு வரும்.

என்றாலும், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதிய கண்டுபிடிப்புக்களைப் படைப்பதற்கும், மானிடப் பிணைப்புக்களின் பெறுமானத்தை விளங்கிக் கொள்வதனூடாக தொழில்நுட்பத்தை வெற்றிகொள்வதற்கும் உங்களுக்கு முடியுமாக இருக்கும்.



- திலான் ஜயதிலக்க -
MBA in IT (University of Moratuwa)
BSC in Engineering
(University of Peradeniya)
PGD in Managment CCVP, ACP, ITIL - V, CLA





# உங்களது பிள்ளையின் தொடர்பாடல் திறனை விருத்தி செய்வது எப்படி?



**சட்டத்தரணி எம்.ஜீ.கிரிஷாந்தி தீபஷிகா**
உதவிப் பணிப்பாளர் (தொழில் வழிகாட்டல்)
மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

அறிவு, கிரகித்தல் போன்றே பிள்ளையின் ஆளுமை விருத்தியில் தொடர்பாடல் திறனும் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. அன்றாட நடவடிக்கைகளின் போது அந்நியோன்னிய தொடர்பை மேற்கொள்வதற்கும், எதிர்கால தொழில் வாழ்க்கைக்கும் தொடர்பாடல் திறன் ஒரு முக்கிய காரணியாக அமைந்துள்ளது.

பிற்காலத்தில் பிள்ளைகளின் மென் திறன்களை விருத்தி செய்வதற்கு அவர்களைப் பல்வேறு பாடநெறிகளுக்குள் இணைத்து விடுவதை விடவும், அதனைச் சிறுபராயத்திலிருந்து படிமுறை படிமுறையாக தானாகவே பிள்ளையினுள் கட்டியெழுப்புவதற்கு உங்களுக்கு முடியுமாயின் உங்களது பிள்ளை உண்மையிலேயே வெற்றிகரமான தகவல் தொடர்பாளராக ஆகுவார்.

இதற்காக வேண்டி சிறு பராயம் முதலே பிள்ளையின் மொழித் திறனை விருத்தி செய்வதில் கவனம் செலுத்துவது முக்கியமாகும். பெற்றோர்களினதும் குடும்பத்திலுள்ள ஏனைய உறுப்பினர்களினதும் சிந்தனைகளும் சமூக நடத்தைக் கோலங்களும் பிள்ளைகளின் மொழி நெறிக்கும், பேச்சு விருத்திக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும்.

தாயின் கருவறையிலுள்ளபோதே தாய் மற்றும் தாயின் சுற்றுச் சூழலிலுள்ள விடயங்களிலிருந்து செவிமடுக்க ஆரம்பிக்கும் குழந்தை பிற்காலத்தில் தாலாட்டு முதல் முழு சமூகத்திலுள்ள பல்வேறு பிரிவுகளுக்கு ஊடாகவும் பெற்றுக் கொள்ளும் அனுபவம் உட்பட, சகல காரியங்கள் மூலமாகவும் தெரிந்து கொள்ளும் விடயங்கள் ஊடாகவும் மொழியானது விருத்தியடைகின்றது என்பது மொழியியலாளர்களின் கருத்தாகும்.

அவ்வாறெனின், பிள்ளையின் தொடர்பாடல் திறனை ஏற்படுத்துவதற்காக பிள்ளையின் மொழி விருத்தியில் கைகொடுக்க வேண்டியுள்ளது. இதுபோன்ற விடயங்களுக்கு சிந்தனையைச் செலுத்தி கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய நாற்கோண மொழிச் செயற்பாட்டு விருத்தியைப் பெற்று, எமது பிள்ளைகளின் அறிவு வளர்ச்சியை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமான முறைமைகள் தொடர்பில் எமது அவதானத்தை செலுத்துவோம்.

# கேட்டல் திறன் வளர்ச்சியினூடாக மொழி விருத்தி

கற்றலுக்குப் போன்றே வாழ்க்கையை வெற்றிகரமானதாக அமைத்துக் கொண்டு புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நன்கு பயிற்றப்பட்ட செவிமடுத்தல் நடவடிக்கை பிள்ளைக்கு முக்கியமானது.

இதற்கான பிரதான காரணம், பேச்சுக்கான பாதை கேட்டல் என்பதாகும். செவிமடுத்தலுக்கு சிறந்த முறையில் பழக்கப்பட்ட காத்திரமான செவிமடுக்கும் திறனைக் கொண்ட ஒரு பிள்ளை சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப உரையாடல்களை உருவாக்குவதற்கு உந்தப்படுவார். அதனை பிள்ளை தனது விருப்பத்துக்குரிய அனுபவமாக மாற்றிக் கொள்வதன் மூலம் பிள்ளையின் கேட்டல் சக்தி பலமடையும்.

இவ்வாறு கேட்டல் மூலம் ஒவ்வொரு விடயம் குறித்தும் கருத்துத் தெரிவிக்க ஆரம்பிக்கும் பிள்ளைகளின் பேச்சுத் திறன் தானாகவே விருத்தியடையும். இதற்காகத் தேவைப்படுவது பெற்றோர்களின் உச்சாகப்படுத்தலே ஆகும். பெற்றோர் பிள்ளைகளின் அனைத்து விதமான செயற்பாடுகளையும் உச்சாகப்படுத்தி பிள்ளையின் மொழி வளர்ச்சிக்கு உந்துதல் அளித்தல் வேண்டும்.

சூழலில் காணப்படுகின்ற பல்வேறு விதமான ஒலிகளை பிள்ளைக்கு அறிமுகப்படுத்துவதனூடாகவும், அதனைப் பிள்ளையிடம் வினவுவதனூடாகவும் பிள்ளையானவர் அதிகமான சொற்களை உள்வாங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

பாடலொன்றைச் செவிமடுக்கச் செய்து பிள்ளை அந்தப் பாடலைப் பாடிய பின், "மகனே ..! நீ அழகாக அந்தப் பாடலைப் பாடினாய். அது மிக அழகாக இருந்தது" போன்ற புகழார வார்த்தையைக் கொண்டோ, கை தட்டல் போன்ற உட்சாகமூட்டல் மூலமோ பிள்ளையின் உள்ளத்தைத் தட்டிக்கொடுக்க வேண்டும்.

அது பிள்ளையின் சிந்தனை சக்தி விருத்திக்கு உறுதுணையாக அமைவதாகவும், சுய கட்டுப்பாட்டுத் திறன் வளர்ச்சிக்கும் ஒரு பாரிய சக்தியாக அமைவதாகவும் உளவியலாளர்கள் கருதுகின்றனர். அதுமாத்திரமின்றி செவிமடுக்கும் சக்தியினூடாக ஞாபகப்படுத்தும் திறன், கற்பனை உருவங்களை உருவாக்கும் திறன், தகவல்களை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தும் சக்தி என்பவற்றை விருத்தி செய்து கொள்வார்.

சிறந்த முறையில் பாடல்களை செவிமடுக்கும் பிள்ளைகளுக்கு நன்றாகப் பாடல்களை இசைப்பதற்கு முடியுமாக இருக்கும். கதைகளை ஆர்வத்துடன் செவிமடுக்கும் பிள்ளைகள் கதைகளை உருவாக்குவதற்கு உந்தப்படுவது போன்று பிற்காலத்தில் அவைகளை எழுதுவதற்கும் முற்படுவார்கள்.

நல்ல செவிமடுத்தல் உள்ள ஒரு பிள்ளை மிக இலகுவாக பாடசாலையில் உள்ள பாடங்களையும் விளங்கிக் கொள்வார். வகுப்பறையிலும் முன்னணியில் பிரகாசிப்பார். மொழியைச் செவிமடுக்கின்ற திறன் மற்றும் ஊடகத்துடனான தொடர்பு என்பன பிள்ளையிடத்தில் இயல்பிலேயே காணப்படுவதனால் பிள்ளையிடத்தில் காணப்படுகின்ற தீர்மான சக்தி மற்றும் செவிமடுத்தல் முறைமை தொடர்பில் நாம் நன்றாக புரிந்து கொள்ளுதல் முக்கியமாகும்.

செவிமடுத்தலானது, கவனமாக செவிமடுத்தல், விநோதமான இரசனையுடன் செவிமடுத்தல், விளக்கமான செவிமடுத்தல் மற்றும் புறச் செவிமடுத்தல் என நான்கு வகையாக கொள்ளப்படுகின்றது. இவற்றில் பிள்ளையினுடைய சுபாவம் எது என்பது பற்றி நாம் புரிந்திருத்தல் வேண்டும். இவற்றில் எவ்வகையான செவிமடுத்தலில் பிள்ளையை ஈடுபடுத்தல் வேண்டும் என்பது தொடர்பில் அறிந்து வைத்திருப்பது பிள்ளையின் செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்கு அடிப்படையாகும்.

கவனமான செவிமடுப்புக்கு பயிற்றுவிக்கும் போது அவர்கள் மிகவும் அவதானத்துடன் செவிமடுக்கின்ற செய்தியொன்றின்பால் அவர்களின் கேட்டலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வீட்டுச் சூழல் தொடர்பான பாடலொன்றை செவிமடுக்க ஏற்பாடு செய்வதனூடாக இரசனையுடனான செவிமடுத்தலை நோக்கி பிள்ளையை வழிநடாத்தலாம்.

கண்ட, கேட்ட விடயங்களை விளக்குவதற்கும், விவரணப்படுத்துவதற்கும், எழுதுவதற்கும் பிள்ளைகள் இயல்பிலேயே விருப்பம் கொண்டுள்ளதனால், அப்பிள்ளைகளுக்கு அது தொடர்பில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும். இதன்மூலமாக பிள்ளையின் மொழித் திறனுடன் சமூகத் திறன்களும் விருத்தியடையும்.

சில பிள்ளைகள் வானொலியைச் செவிமடுத்தவர்களாக பாடங்களைக் கற்கின்றார்கள். அது புறச் செவிமடுத்தலுக்குப் பழக்கப்பட்ட ஒரு பிள்ளையாகும். அப்பிள்ளைக்கு ஒன்றைச் செவிமடுத்துக் கொண்டு இன்னொரு வேலையில் ஈடுபடுகின்ற திறன் இருப்பதை நீங்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

அதுவல்லாமல், "நீ வானொலியை அல்லது தொலைக்காட்சியை நிறுத்திவிட்டுப் படி." எனக் கட்டளை பிறப்பிக்கக் கூடாது. இது பிள்ளையின் நடத்தை விருத்திக்கு காரணமான ஒன்றாகும். அதுமட்டுமன்றி, செவிமடுக்கும் பிள்ளையினுடைய பேச்சு விருத்திக் கட்டங்கள் தொடர்பாக நீங்கள் அறிந்து வைத்திருக்க வேண்டும்.



# பிள்ளையின் பேச்சுவிருத்தியின் போது நீங்கள் அறிந்து கொண்டவை

ஒரு பிள்ளையின் வளர்ச்சியுடன் இணைந்ததாக மொழியும் வளர்ச்சியடைகின்றது. இரண்டு வயதுடைய ஒரு பிள்ளை 272 சொற்களைப் பேசுகின்றது. அதேபோன்று ஐந்து வயதாகும் போது அப்பிள்ளை 2072 சொற்களைப் பேசுகின்ற அளவுக்கு வளர்ச்சியடைகின்றது. இது தொடர்பில் நீங்கள் அறிந்திருப்பதனுடைய நன்மைகள் பிள்ளைகளுக்கே போய்ச் சேருகின்றன.

பேச்சுவிருத்திக்கான கட்டங்கள் பல வகைப்படுகின்றன.

இரண்டு வயதுப் பிள்ளை 272 சொற்கள்

மூன்று வயதுப் பிள்ளை 900 சொற்கள்

ஐந்து, ஆறு வயதுப் பிள்ளை 2000 - 2500 சொற்கள்

மொழியியலாளர்களுடைய கருத்துப்படி, ஒரு பிள்ளையின் மொழி வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில், 80 வீதமானவை பெயர்ச் சொற்களாகவும், 12 வீதமானவை வினைச் சொற்களாகவும், 6 வீதமானவை அடைமொழிச் சொற்களாகவும் ஏனையவை வேறு சொற்களாகவும் பதியப்படுகின்றன. அவ்வாறெனின், உங்களது பொறுப்பு பிள்ளைக்கு அதற்காகப் பல வழிகளிலும் உதவுவதாகும். அவ்வுதவியானது ஒரு கதையாகவோ, கலந்துரையாடலாகவோ, ஒரு சிறிய பாடலாகவோ அமையலாம்.

அதுவல்லாதவிடத்து, பிள்ளை தொடர்பில் முன்னெடுக்கப்படுகின்ற மதிப்பீடு பல்வேறு முறையிலும் வழங்கப்படலாம். அப்போது பேச்சாற்றலைப் போன்று புத்தாக்க சிந்தனையும் வளர்கின்றது. அத்துடன், எதிர்காலத்தில் சிறந்த முறையில் மொழியைப் பயன்படுத்துபவராகவும் அவர் விளங்குவார்.

இயந்திரங்கள் மூலமாக சொற்கள் படங்களை இணைத்து கூறுவதை விடவும், கதைகள் படங்கள் என்பவற்றினூடாக மொழியறிவைக் கட்டியெழுப்புவதனால் மொழிப் பாவனைக்குறிய திறன் முன்னேற்றமடையும்.

அதேபோன்று பிள்ளையை வாசிக்கப் பழக்கப்படுத்துவது முக்கியமான ஒன்றாகும். ஆரம்பத்தில் வாசிப்புக்காக பிள்ளை விரும்புகின்ற தலைப்புக்களைத் தெரிவு செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். "மகனே..! மழை எவ்வாறு பொழிகிறது என்று கேட்டாய் அல்லவா. இதோ பார்..! இந்தப் புத்தகத்தில் அது பற்றி அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அம்மாவுக்கும் கேட்கும்படி மகனே.. அதனை வாசி பார்க்கலாம்."இது போன்ற உந்துதல்கள் உங்கள் மூலம் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். பின்னர் அவர்கள் அதனைப் படிப்படியாக முன்னேற்றிக் கொள்வார்கள்.

அம்மாவுடன் புத்தகக் கடைக்குச் செல்வோம். உனக்கு விருப்பமான புத்தகங்களை அப்போது நீ தேர்ந்தெடுக்க முடியும் என்று பிள்ளைகளுக்கு சந்தர்ப்பத்தை வழங்கி அவர்களது விருப்பத்தை விளங்கிக் கொண்டு அவர்களுக்கு அவசியமானவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு உங்களால் உதவ முடியும். இவ்வாறான செயற்பாடு அவர்களுக்குள் தன்நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்வதற்கும், தன்னைப் பற்றிய சுய மதிப்பெண்ணத்தை உருவாக்கிக் கொள்வதற்கும் உந்துதலாக அமையும்.

பிள்ளையினுடைய மொழி விருத்தியுடன் அறிவு வளர்ச்சியும் இடம்பெறுவதனால் பேச்சு, எழுந்து, வாசிப்பு போன்ற நடவடிக்கைகள் பிள்ளையிடத்தில் நன்றாக விருத்தி செய்யப்பட வேண்டும். பிள்ளையிடத்தில் கருத்துருவாக்கத்துக்கு அவரது சிந்தனையில் அனுபவங்கள் நிறைந்து காணப்படல் வேண்டும்.

இதற்காக வேண்டி, பொருத்தமான சூழலை ஆரம்பம் முதலே உங்களினால் உருவாக்கிக் கொடுக்கப்பட வேண்டும். அத்துடன், இதுபோன்ற பல்வேறுபட்ட மொழித் திறமைகளை விருத்தி செய்வதற்காக பெற்றோர் அவதானத்தைச் செலுத்தி பிள்ளையிடத்தில் வெற்றிகரமான தொடர்பாடல் திறனை அதிகப்படுத்த முடியும்.

சமகாலத்தில் தொழில் துறையில் பிரவேசிக்கின்ற போது திறன்களுக்குப் போன்றே சம அளவான முக்கியத்துவம் தொடர்பாடல் திறனுக்கும் வழங்கப்படுகின்றது. இதனால், உங்களது பிள்ளையின் மொழி விருத்திக்காக இப்போதிலிருந்தே கவனம் செலுத்துவோம்.





# உங்களது தொடர்பாடல் வலையமைப்பை விருத்தி செய்து கொள்ளுங்கள்

இந்த உலகில் நாம் தனியாகப் பிறந்தாலும் நாம் வாழ்வது தனியாக அல்ல. குடும்பம், பாடசாலை அதன் பிறகு சமூகம் என உங்களது வாழ்க்கை அழகாக எடுத்துச் செல்லப்படுவது, நீங்களும் உங்களோடு இணைந்து கொள்பவர்களதும் அழகான சந்திப்புக்களினூடாகவே ஆகும்.

சிறுவயது முதல் இதுவரை நீங்கள் சந்தித்துள்ளவர்களை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? சிலபோது சில விசேட அனுபவங்களுக்கூடாக மாத்திரம் சிலர் ஞாபகத்தில் இருந்தாலும், தங்களது குடும்பத்தில் நெருக்கமானவர்களைத் தவிர ஏனையவர்களைப் பற்றிய நினைவுகள் சொற்பமாகவே காணப்படுகின்றன என்பது விளக்கம் தேவையற்ற ஒன்றாகும். அவ்வாறிருந்தாலும், சில அவசியமான தேவையொன்றுக்காக ஒருவர் உங்களுக்கு தேவைப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அவரைப் பற்றிய தொலைபேசி இலக்கத்தைக் கூட இழந்துவிட்ட உங்களுக்கு, கவலை ஏற்பட்டிருக்கின்ற சந்தர்ப்பங்கள் உங்கள் நினைவில் இல்லாமல் இல்லை.

அவ்வாறே மிக முக்கியமான ஒரு நபர் அருகில் இருக்கையில் அவரைப் பற்றி நீர் அறியாத காரணத்தினால், அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய பெறுமதி வாய்ந்த ஒரு சேவையை பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் கை தவறிப் போன சந்தர்ப்பம் உங்களுக்கு நினைவிருக்கின்றதா? இதுபோன்ற அனுபவங்களை நீங்களும் நானும் எவ்வளவோ அனுபவித்திருப்போம்.

நீங்கள் எந்தவொரு தரத்தைச் சேர்ந்தவராயினும், எந்தவொரு வயதைக் கொண்டிருந்தாலும் இவ்வுலகில் தனித்து வாழ்வது கஸ்டமான ஒன்றாகும். அடிக்கடி எமக்கு ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்வதற்கு வேண்டி ஏற்படும். நாம் விரும்பினாலும் சரி, விரும்பா விட்டாலும் சரி அது அத்தியாவசியமான ஒரு தேவையாகும். அவ்வாறே, ஒருவர் வெற்றிகரமான தொழில் வல்லுனராவதற்கு தனிநபர்களுக்கிடையிலான தொடர்பை மேற்கொள்வதற்கு முடியுமான ஒருவராக இருப்பது அவசியமாகும். இது அவரது “மென் திறமைகளில” ஒன்றாக நோக்கப்படுகின்றது.

பெரும்பாலான தொழில்களுக்கான ஓர் அத்தியவசிய காரணியாகவும் இது அமைந்துள்ளது. நேர்முகப் பரீட்சைகளின் போதும் உங்களிடமிருந்து நிறுவன உரிமையாளர்கள் எதிர்பார்ப்பதும் இந்தக் குணப் பண்பையே ஆகும். இந்தக் குணப் பண்பை முன்னேற்றிக் கொள்வது இளைஞர்களாகிய உங்களது தொழில்துறையை வெற்றிகரமானதாக அமைத்துக் கொள்ள அத்தியாவசியமான காரணியாகும்.

கடந்த கொரோனா தொற்றின் போது எமது நாடு முடக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் மக்களுக்கு சிறந்ததொரு பாடத்தை சொல்லிக் கொடுத்த விதம் உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? மேலதிக கற்பித்தல், ஆடைகள் தைத்தல், சட்ட நடவடிக்கைகள், பொருட்களைப் பழுதுபார்த்தல், மருந்து விற்பனை, கைத்தொழில் நடவடிக்கைகள், வீடு வாடகைக்கு விடல் போன்ற ஆயிரக் கணக்கான நடவடிக்கைகள் இந்த ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது இடம்பெற்றது என்பது இரகசியமான ஒன்றல்ல.

இருப்பினும், இவைகள் அனைத்தும் இடம்பெற்றது சாதாரண காலத்தில் இடம்பெறுவது போன்று அல்ல. நாடொன்றில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு மூடப்பட்டாலும் மனிதர்களுடைய அத்தியாவசியத் தேவைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியாது. அதன்போது நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்களுக்கு ஏற்ப, அந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தாலும் அந்த சந்தர்ப்பத்தை வர்த்தகத்துக்கான ஒரு சந்தர்ப்பமாக மாற்றிக் கொள்வதற்கு சிறந்த ஆளிடைத் தொடர்பைப் பேணி வந்த ஒருவருக்கே முடியுமாகவுள்ளது.

பொருட்களைக் கொள்வனவு செய்தல், விநியோகித்தல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் இணையம் மற்றும் தொலைபேசித் தொடர்பு என்பவற்றோடு புதிய தொடர்புகளையும் வைத்திருந்த ஒருவராலேயே முடிந்தது.

தமது வாடிக்கையாளர்களுடன் சிறந்த தொடர்புகளைப் பேணி, அவர்களது பெயர், ஊர், முகவரி போன்ற தகவல்களை வைத்து தொடர்புகளை முன்னெடுத்து, தொடர்ந்தும் அந்த தொடர்பை பாதுகாத்து வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றி அவர்களது நம்பிக்கையை வென்று செயற்பட்டவர்கள் பற்றி விசேடமாக நீங்களும் அறிந்திருப்பீர்கள்.

அங்கு குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், மனித உள்ளங்களை வெற்றி கொண்ட மையாகும். நகரிலுள்ள பல்பொருள் அங்காடிகளை விடவும் கிராமத்திலுள்ள கடைகள் வெற்றிகரமாக அமைவதற்கு இதுவே காரணமாகியது. அதேபோன்று சட்ட நடவடிக்கைகளின் போதும் கூட சட்டத்தரணிகளின் சேவையை ஆரம்பத்தில் தொடர்புகளை வைத்திருந்தவர்களிடம் இருந்தே பெற்றுக் கொண்டார்கள்.

இந்த நடவடிக்கைகளிலிருந்து நாம் கற்றுக் கொள்கின்ற பாடம் என்னவெனில், எந்தவொரு தொழிலையும் வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எங்களுடைய மக்கள் தொடர்பு வலையமைப்பைப் பலப்படுத்திக் கொள்வது முக்கியமானது என்பதையே ஆகும்.

அப்படியாயின், எமது மக்கள் தொடர்பு வலையமைப்பை விரிவுபடுத்திக் கொள்வது எப்படி? என்பதனை நோக்குவோம். ஒருவரைக் கண்டவுடன் அவருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது என்பதனூடாக அவருடன் மிக நெருக்கமாக தொடர்பு கொள்கின்றார் என தவறாக எண்ணிவிடக் கூடாது. இதன் மூலம் நாடப்படுவது என்னவென்றால், எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் நாங்கள் சந்திக்கின்ற பல்வேறுபட்ட நபர்கள் தொடர்பாக ஏதாவதொரு தகவல் பதிவு அமைப்பொன்றை முன்னெடுப்பதாகும்.

அதேபோன்று, சந்திக்கின்ற அனைவருடனும் அந்நியோன்னியமாக அகம்பாவம் இன்றி அவர்களின் தராதரங்கள் பார்க்காமல் அவர்களை மதித்து, அவர்களுடைய உள்ளங்களில் உங்களைப் பற்றிய மனப்படத்தைப் பதிப்பதற்கு உங்களுக்கு வாய்ப்பிருக்கிறது.

உங்களது கல்வித் தகைமை, தொழில் மற்றும் சமூக உறவுகளுடன் தொடர்புபடும் விதம் போன்றன அடிப்படையில் ஒருவருக்கொருவர் இடையில் நீங்கள் வழங்குகின்ற பதில்கள் வித்தியாசப்படலாம். இருப்பினும், நீங்கள் திறமைசாலியாக இருந்தால், அதிகளவிலான தொடர்பு வலையமைப்பொன்றை உங்களால் தயார்படுத்த முடியும்.

அவ்வாறு தயார் செய்கின்ற அந்த வலையமைப்பு உங்களுக்கான சிறந்த நண்பர்கள் வட்டமொன்றாக மாத்திரமின்றி அறிவைப் பரிமாறிக் கொள்வதற்கும் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் பொருட்கள் சேவைகள் என்பவற்றை விநியோகிப்பதற்கும் உங்களது விசேட அறிவை வழங்குவதற்கும் உங்களுக்கான ஓர் அடித்தளமாகும். இதற்காக வேண்டி சமூக வலைத்தளத்தைக் கூட உங்களது உதவிக்கு எடுத்துக் கொள்ளலாம்.

இதுபோன்ற வலையமைப்பினுடைய பெறுமதி தொற்று நோய்க் காலங்களில் மாத்திரமின்றி நாட்டில் சிறந்ததொரு சூழ்நிலை நிலவுகின்ற காலத்திலும் கூட அத்தியாவசியமான ஒன்றாகும். எவ்வளவுதான் சேவை வழங்குனர்கள் இருந்தாலும் உங்களது முடி வெட்டுவதற்கும், ஆடை தைப்பதற்கும் புதிய ஒருவரிடம் ஒப்படைக்க விரும்ப மாட்டீர்கள். இவற்றை உங்களுக்கு நம்பிக்கை யுள்ள, அனுபவமுள்ள, பழக்கமுள்ள ஒருவருக்கே நீங்கள் வழங்குவீர்கள். இது உங்களுடைய ஆளுமை, சுயகௌரவம் என்பவற்றுக்கு பாதிப்பு என்பதனாலாகும்.

இதனால், எப்போதும் உங்களுடைய நடவடிக்கைகளுக்காக நம்பிக்கையை வென்ற பழக்கமுள்ள ஒருவரையே தொடர்புபடுத்துவீர்கள். இந்த அடிப்படையில் நீங்கள் சேவை வழங்குனராக இருந்தால், எவ்வளவுதான் புதிய போட்டியாளர்கள் தோன்றினாலும் உங்களது சேவை பெறுநருக்கு உங்களைப் பற்றிய நம்பிக்கை இருக்கும் வரை உங்களை விட்டும் அவர்கள் செல்ல மாட்டார்கள்.

அதனால், நீங்கள் எப்போதும் அவருடனான தொடர்பை துண்டித்துக் கொள்ளாமல் சிறந்த சேவையை வழங்குவதற்கு முயற்சிப்பது உங்களது கடமையாகும். அதன்போது உங்களுக்கு சந்தையில் ஏற்படுகின்ற போட்டித் தன்மை குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை.

நீங்கள் சந்திக்கின்ற மனிதர்கள் வெவ்வேறான சமயங்களைச் சேர்ந்தவர்கள் ஆகவும், அரசியல் ரீதியாக வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டவர்களாகவும் காணப்படுவர். இதன்போது, அவர்களுடன் இது தொடர்பிலான வாத விவாதங்களில் சம்பந்தப்படாமல் நீங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். அதேபோன்று, நெருங்கிய ஒருவருடையவன்றி, வேறு எவருடைய தனிப்பட்ட விடயத்திலும் மூக்கை நுழைக்கக் கூடாது.

ஒருவர் உள்ள இடத்திலும், இல்லாத இடத்திலும் அவரைப் பற்றி விமர்சிப்பதைத் தவிர்ந்துகொள்ள வேண்டும். அதேபோன்று ஒருவரைச் சந்திக்கின்ற போது அவரிடம் அவருடைய பெயர், சேவை புரியும் இடம், ஊர், அவரது தொழில், தொலைபேசி இலக்கம், ஈ-மெயில் முகவரி, FB போன்ற தகவல்களைப் பெற்று ஓரிடத்தில் பதிவு செய்து கொள்ள முடியுமாயின் அது மிகவும் சிறந்ததாகும்.

முதல் தடவையாக தகவல் பெற்ற ஒருவரிடம் முடியுமானால் தொலைபேசி அழைப்பொன்றை எடுத்து உங்களது ஞாபகத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். பிறந்த தினம், புதுவருடம் போன்றவற்றின் போதும், வாழ்த்துச் செய்தி ஒன்றை இணையத்திலோ அல்லது தொலைபேசி ஊடாகவோ சேர்த்துக் கொள்வது இன்று சிரமமான காரியமல்ல. எப்போதும் மலர்ந்த முகத்துடன் உங்களுக்கு காட்சியளிக்க முடியுமாயின் ஏனையவர்களுக்கு அது விருப்பத்துக்குரிய ஒன்றாக இருக்கும்.

எப்போதும் ஒருவரைச் சந்திக்கின்ற போது முதலில் வாழ்த்துத் தெரிவிக்க வேண்டும். அத்துடன் பேச்சை முதலில் நீங்களே ஆரம்பிக்க வேண்டும். அது ஒருபோதும் உங்களுக்கு அகௌரவமான ஒன்றல்ல. உங்களிடம் வருகின்ற எந்தவொருவருக்கும் மதிப்பளியுங்கள். உங்களிடம் உதவி வேண்டி நிற்கின்ற ஒருவருக்கு முடியுமானால் உதவி செய்யுங்கள். உதவி அவசியமாக இருக்கின்ற ஒருவருக்கு உங்களால் முடியுமான உதவியை அதிகபட்சமாக செய்யுங்கள்.

உங்களது மலர்ச்சியான ஆளுமையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுங்கள். உங்களது தனிப்பட்ட தோல்விகள், வீழ்ச்சிகள் என்பன தொடர்பில் நெருக்கமான ஒருவரிடம் அன்றி கதைப்பதைத் தவிர்த்து கொள்ளுங்கள். எப்போதும் தனிப்பட்ட வாழ்க்கையில் ஒரு கொள்கை வாதியாக செயற்படுங்கள். உங்களது அடையாளத்தைக் கட்டியெழுப்புங்கள். இதன்போது ஏனையவர்கள் உங்களை விளங்கிக் கொண்டு உங்களோடு அதற்கு ஏற்றாற்போல் நடந்துகொள்வார்கள்.

இது போன்று, உங்களது தொடர்பாடல் வலையமைப்பு விரிவடைவதனால், உங்களுக்கு கிடைக்கின்ற நலன்களை அனுபவியுங்கள். இதனை மற்றவர்களுக்கும் விளக்கிக் கூறுங்கள். நீங்கள் எந்த வகையான தொழில் ஒன்றைச் செய்தாலும் சிறந்த ஆளிடைத் தொடர்பைப் பேணி வரமுடியுமாயின் ஒரு போதும் தோல்வியடைந்த ஒருவராக உங்களுக்கு மாற வேண்டி ஏற்படாது.



**– எரந்ததி ரந்தெனி –**
தொழில் வழிகாட்டல் அதிகாரி,
மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்





# உங்களை அடையாளம் காண்பதற்கு உதவிடும் மூளையின் திறப்புப் பரிசோதனை (Brain Key)

சந்தோசமாக வாழ்வதற்கும் வாழ்க்கையை வெற்றி கொள்வதற்கும் நாம் ஒவ்வொருவரும் விருப்பம் கொள்வோம். என்றாலும், எல்லோருக்கும் மிகச் சரியான பாதையில் பயணித்து தன்னுடைய இலக்குகளை விரைவாக அடைந்துகொள்வதற்கான வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை.

அவ்வாறு நடப்பது அந்த நபரது இயலாமையின் வெளிப்பாடு அல்ல. சிறுபராயம் முதல் தனது திறன்களை அடையாளங்கண்டுகொள்ளாமை, சரியான வழிகாட்டல் கிடைக்காமை, வளம் மற்றும் சந்தர்ப்பங்கள் குறைவாகக் கிடைத்தமை போன்ற பல்வேறு காரணங்கள் இதில் தாக்கம் செலுத்தலாம்.
இந்த நிலைமையை இல்லாமல் செய்து தன்னுடைய விசேட இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நினைக்கும் யாருக்கும், தனது சுய அறிமுகத்தையும், ஆளுமையையும் அறிந்து கொள்வது அவசியமான ஒரு காரணியாகும். ஏனெனில், யாராயினும் தனது உயரிய இலக்கை நோக்கிச் செல்வதற்கு இதனைத் தெரிந்து கொள்வது முக்கிய விடயமாகவுள்ளது.

சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுடைய இயல்பான திறமைகள், விருப்பு - வெறுப்புக்கள், பலம் -பலவீனங்கள் என்பவற்றை அறிந்துகொண்டு அவர்களுக்குப் பொருத்தமான விதத்தில் அவர்களை வழிநடாத்த முடியுமாயின் வெற்றியை நோக்கி அவர்களைக் கொண்டு செல்வது அவ்வளவு சிரமமான ஒன்றல்ல.

ஒருவருடைய நடத்தை மற்றும் தோற்றம் என்பவற்றைப் பார்ப்பதன் ஊடாக, அவருடைய உயிரியல் விஞ்ஞான அடையாளங்களை விஞ்ஞான ரீதியாக இனங்கண்டு, அந்த நபரை மேலும் சில விசேட வழிமுறையின் மூலம் அடையாளம் கண்டு அவருக்கே உரித்தான முறையில் எதிர்காலத்திற்கு தேவையான வழிகாட்டல்களை வழங்கும் முறைமை உலகில் தற்பொழுது மிகப் பிரபல்யமான ஒரு அங்கமாக மாறியுள்ளது.

இம்முறை ஹசர இதழின் மூலம் நாம் உங்களுக்கு அறிமுகப்படுத்துவது 1920 ஆம் ஆண்டில் கலாநிதி வில்லியம் மாஸ்டர்ஸினால் அறிமுகப்படுத்திய அதுபோன்றதொரு எண்ணக்கருவையாகும். இதன் இலக்காகக் காணப்படுவது ஒருவரின் நடத்தை மற்றும் பண்புகளைக் கட்டியெழுப்பும் விதம் குறித்து ஒரு நபரை விஞ்ஞான ரீதியில் அடையாளம் கண்டு அவருக்குப் பொருத்தமான விதத்தில் இலக்கு நோக்கிச் செல்வதற்கான வழிகாட்டலை வழங்குவதாகும்.
கலாநிதி அவர்கள் இதனை நான்கு பறவைகளின் குணப் பண்புகளைத் தொடர்புபடுத்தி முன்வைத்துள்ளார். இது “டிஸ்க்” (DISC) என்ற பெயரினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## Dominant (D)

இந்த இயற்கைத் தன்மைக்குப் பொருத்தமான ஒரு பறவைதான் கழுகு. இந்தக் கழுகு 1500 அடி அளவு வான் உயரத்தில் வசிக்கும் ஒரு பறவையாகும். எந்தவொரு தடை வந்தாலும் தனது இலக்கை அடைந்துகொள்வது அதன் பண்பாகும்.

கழுகின் குணவியல்புகள் உடைய மனிதக் குழுக்களும் இக்கழுகைப் போன்றதே. அவர்களும் எந்தவொரு தடை வந்தாலும் தனது இலக்கை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுப்பர். அங்கு அவர்களைச் சுற்றி யார் இருந்தாலும் எந்தவிதத்தில் அழுத்தங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் அவை தொடர்பில் எந்தவிதக் கவனச் சிதரல்களும் இன்றி தனது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் அவர்கள் திறமைசாளிகளாவார்கள்.

அவர்களது குணவியல்புகளுக்கு ஏற்ப அவர்களை சிறிதளவு சுயநலப் போக்குள்ள கோபக்காரராகவும் அடையாளப்படுத்த முடியும். எந்தவொன்றும் குறிவைக்கப்பட்ட பின்னர் அதனைப் பின்தொடர்ந்து செல்வது அவர்களது அடையாளமாகும். அதனை நல்ல முறையிலோ அல்லது தீங்கான முறையிலோ செய்து முடிப்பார்கள். அடுத்தவர்களைத் தனக்கு அடிமைப்படுத்தி வைக்க விருப்பமுள்ள இவர்கள் எப்பொழுதும் கௌரவத்தையும், பாராட்டையும் அடுத்தவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். எப்பொழுதும் அடுத்தவர்களுக்கு உயரத்தில் இருப்பதே இத்தகையவர்களது விருப்பமாகும். இதுபோன்ற குணவியல்புள்ள ஒரு பிள்ளையை உருவாக்கிக் கொள்வது எவ்வாறு?அவர்களது குணவியல்புகளுக்கு ஏற்ப அவர்களை சிறிதளவு சுயநலப் போக்குள்ள கோபக்காரராகவும் அடையாளப்படுத்த முடியும். எந்தவொன்றும் குறிவைக்கப்பட்ட பின்னர் அதனைப் பின்தொடர்ந்து செல்வது அவர்களது அடையாளமாகும்.



அதனை நல்ல முறையிலோ அல்லது தீங்கான முறையிலோ செய்து முடிப்பார்கள். அடுத்தவர்களைத் தனக்கு அடிமைப்படுத்தி வைக்க விருப்பமுள்ள இவர்கள் எப்பொழுதும் கௌரவத்தையும், பாராட்டையும் அடுத்தவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். எப்பொழுதும் அடுத்தவர்களுக்கு உயரத்தில் இருப்பதே இத்தகையவர்களது விருப்பமாகும். இதுபோன்ற குணவியல்புள்ள ஒரு பிள்ளையை உருவாக்கிக் கொள்வது எவ்வாறு?

கழுகின் குணவியல்புள்ளவர் எப்பொழுதும் வீட்டில் தனது கருத்தைத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும் என்ற விருப்பம் உள்ளவர்களாக இருப்பார்கள். இதுபோன்ற பிள்ளைகளுக்கு கண்டிப்பு, தண்டிப்புக்களைக் காட்டுவதை விடவும் அவர்களை கௌரவப்படுத்தி பாராட்டுக்களை வழங்கி உட்சாகப்படுத்துவது மிகப் பொருத்தமான நடவடிக்கையாகும்.

அவர்களுக்கு சிறுபாராயம் முதலே சிறந்த வாழ்க்கைக்கான இலக்கொன்றைப் பெற்றுக் கொடுப்பதே இங்கு முக்கிய விடயமாகும். அவர்களது திறமை மற்றும் விருப்பு என்பவற்றுக்கு ஏற்ப சிறந்த கல்வி இலக்கொன்றும் தொழில் இலக்கொன்றும் அவர்களது உள்ளங்களில் ஏற்படுத்தினால், அந்த இலக்கை வெற்றி கொள்வது அவர்களினால் இடம்பெறும்.

குறிப்பாக, அவர்களது தீர்மானங்களுக்கு வீட்டில் ஒரு தனியிடம்கொடுத்து மதிப்பளிப்பது போன்ற விடயங்கள் வீட்டில் இடம்பெறவேண்டும். இவ்வாறான பிள்ளைகளுக்கு உடலியல் ரீதியான தண்டனைகளை வழங்குதல், நிந்தித்தல் மற்றும் குற்றம் சுமத்துதல் என்பன மிக மோசமான நடவடிக்கைகளாக கொள்ளப்படுகின்றன. இதுபோன்ற நடவடிக்கைகள் அவர்களது இலக்கை நோக்கிப் பயணிப்பதைக் கூட நிறுத்தி விடுவதற்கு காரணமாக அமைந்துவிடலாம்.

இதனால், கழுகின் குணவியல்புகள் உள்ள பிள்ளைகளை சிறந்த இலக்குகளை நோக்கி செல்வதற்கு வழிகாட்டலை வழங்க வேண்டும்.



## Influential (I)

இதனுடன் தொடர்புடைய பறவை மயிலாகும். வெளிப்படையாக தன்னைக் காட்டிக் கொள்வதற்கான விருப்பம், மிகவும் தன்னை அலங்கரித்துக் கொண்டு வாழ்வதற்கான விருப்பம், ஒழுங்கு முறைப்படி இருத்தல் என்பன போன்ற குணவியல்புகள் கொண்டவர்கள் இந்த மயிலின் குணப் பண்புகள் கொண்டவர்களாக அடையாளப்படுத்த முடிகின்றது.

நேர முகாமைத்துவ தன்மை குறைந்த இத்தகையவர்கள் தன்னை வெளிப்படையாக காட்டிக் கொள்வதற்குள்ள ஆசையின் காரணமாகவே முட்டாள்தனமான வேலைகளைக் கூட செய்வதற்குத் துணிவார்கள்.

மயிலும் கூட, இலக்கு நோக்கிப் பயணிக்கும் ஒரு பறவையாகும். சோர்வான இந்த மயில் எவரிடத்திலும் இரண்டாம் பட்சமாக மாறுவதற்கு விரும்பாத ஒரு பறவையாகும். அத்துடன், எல்லாவற்றையும் ஒழுங்கு முறைப்படி வைப்பது அவசியம் எனக் கருதுவதனால், எல்லாவிடயங்கள் தொடர்பிலும் சிரமப்பட்டுக்கொள்ளும் தன்மை உள்ளவர்களாக இத்தகைய மயில் சுபாவமுள்ளவர்கள் காணப்படுவர். இத்தகையவர்களுக்கு பாராட்டு, மதிப்பு என்பன வழங்குவது அவசியமாகும். தேவையற்ற முறையில் காலத்தை செலவு செய்வதைக் குறைத்துக் கொண்டு சிறந்த முறையில் வாழப் பழக்கப்படுத்திக் கொள்வதன் மூலம் மயிலின் குணவியல்புள்ள இத்தகையவர்களை வெற்றிகரமான வாழ்வை நோக்கி வழிநடாத்த முடிகின்றது.

சில நபர்களிடம் இந்த மயிலின் குணவியல்புகளுடன் கழுகின் குணவியல்புகளும் சேர்ந்தே இருக்க முடியும். இத்தகைய கலப்புக் குணவியல்புள்ளவர்களுக்கு கழுகின் இலக்கு நோக்கிப் பயணிக்கும் பண்பையும், மயிலின் வெளிப்படையாக தன்னைக் காட்டிக் கொள்ளல் மற்றும் இரண்டாம் பட்சமாக மாறுவதற்கு விரும்பாமை போன்ற குணப்பண்பையும் கொண்டு சிறந்த வெற்றிகளை தன்வயப்படுத்திக் கொள்ள முடிகின்றது.

## Steady (S)

இந்தக் குணவியல்புகளுடன் சம்பந்தப்பட்ட பறவையாக புறா காணப்படுகின்றது. உலகில் பெரும்பாலானவர்கள் இந்தப் பறவையின் குணவியல்புகளைக் கொண்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

புறா சாதாரணமாக அதி உயரத்தில் வானில் பறக்கும் ஒரு பறவையன்று. அது சாதாரணமாக கூரையளவு உயரத்தில் பறக்கும் ஒரு பறவையாகும். இந்தக் குணவியல்புள்ளவர்கள் பாரிய இலக்குகளை மனதில் கொண்டிருந்தாலும் கூட அதற்காக சிறியளவு தூரமே பயணிப்பார்கள்.

கூட்டமாக இருக்கும் புறாக்கள் போலவே இந்தக் குணவியல்புள்ள பிள்ளைகள், பல நண்பர்களுடன் நட்புக் கொள்வார்கள். இத்தகையவர்கள் தமது நண்பர்கள் கூட்டத்திற்கே முதலிடத்தைக் கொடுப்பவர்கள். இதனாலேயே, பெரும்பாலான பிள்ளைகள் தமது பெற்றோருடன் கட்டுக்கடங்காமல் நடந்துகொள்வதைக் காண முடிகின்றது. குறிப்பாக தனது தாயுடன் இவ்வாறு நடந்துகொள்வார்கள்.

இதற்கு உயிரியல் விஞ்ஞான ரீதியில் ஒரு காரணம் கூறப்படுகின்றது. அது ஒரு பிள்ளை, தாயின் வயிற்றில் இருக்கும் போதே தாயுடைய பெரு மூளையின் வலதுபக்கத்தில் குழந்தை பற்றிய உணர்வு வேகமாக வளர்ச்சியடைகின்றது. இது வளர்ச்சியடையும் போது அப்பிள்ளையின் தாய் தனது பிள்ளையை உள்ளார்ந்தமாகவும், வெளிப்படையாகவும் பாதுகாக்க முற்படுகின்றாள். பிள்ளை பிறந்த பின்னரும் இந்த நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெறும். இதனால், பிள்ளை செய்கின்ற, கூறுகின்ற பல விடயங்களை தாய் உள்ளார்ந்த ரீதியில் புரிந்துகொள்கிறாள். இதன்காரணமாகவே அடிக்கடி பிள்ளையை வழிப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் அவள் எடுக்கும் முயற்சி, பிள்ளைக்குத் தலையிடியாக விளங்குகிறது.



இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் தாயுடன் முரண்படுவதற்கு பிள்ளைகள் முற்படுவார்கள். என்றாலும், இப்படியான பிள்ளைகளை இலக்கை நோக்கி வழிநடாத்தக் கூடிய முக்கிய பாத்திரமாக தாய் விளங்குகிறாள். இப்படியானவர் தீர்மானங்களை எடுப்பது மூளையினால் அன்றி, உள உணர்வுகளினாலேயே ஆகும்.

இதனால், அந்தத் தீர்மானம் தவறவிடுவதற்குக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இதனால், பெற்றோர்கள் இப்படியானவர்களின் உற்ற நண்பர்களாக மாறவேண்டும். ஏனென்றால், புறாவினுடைய குணவியல்புகளையுடையவர்கள் அப்பாவிகளாக இருக்கிறார்கள். இதனால், இந்த இரக்க சுபாவம் காரணமாக அடுத்தவர்களினால், ஏமாற்றப்படுவதற்கு அதிக வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

உணர்வு பூர்வமாக இருக்கும் இத்தகையவர்கள் அன்புக்கு அடிமையானவர்களாக உள்ளனர். உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் சிந்தனையுடையவர்கள் என்பதனால், அடுத்தவர்களின் கவலைகளை இலகுவில் விளங்கிக் கொள்வார்கள். இதனால், பெற்றோரும் நண்பர்கள் போன்று அவர்களுடன் நடந்துகொள்ள வேண்டியுள்ளனர். அன்பை உணரும் விதத்தில் அவர்களுக்கு வழங்க வேண்டியுள்ளனர்.

அத்துடன், பிள்ளைகள் பழகும் நபர்கள் குறித்து தேடியறிந்துகொள்ள வேண்டியுள்ளனர். அப்படியானால், உரிய இலக்கை நோக்கிப் பிள்ளையை வழிநடாத்துவது இலகுவான காரியமாக மாறிவிடும்.

# Complaint (C)

இதனுடன் தொடர்புடைய பறவையாக ஆந்தை உள்ளது. ஆந்தையின் குணவியல்புள்ளவர்கள் எப்பொழுதும் தமக்கு வசதியான வலயத்தில் வாழ்வதற்கு ஆசைப்படுவார்கள். சரியானவற்றையும், தவறானவற்றையும் செய்வதற்கு விரும்பாத இவர்கள் தேவையில்லாத சிக்கல்களில் மாட்டிக்கொள்ளாமல் வாழ்வதற்கு அதிகம் விருப்பம் கொள்வார்கள்.



சூழல் மாற்றத்துக்கு ஏற்ப செயற்படுவதற்கு இத்தகையவர்கள் பின்நிற்கின்றார்கள். அதேபோன்று புதிய சவால்களை ஏற்பதற்கும் ஆர்வம் காட்ட மாட்டார்கள். ஆந்தையின் குணவியல்புகளும், புறாவின் குணவியல்புகளும் கலந்துள்ளவர்கள் நண்பர்களின் மனங்களை நோகடிக்க விரும்ப மாட்டார்கள். இந்த ஆந்தைக் குணவியல்புள்ளவர்கள் சமூகத்தில் குறைந்த சதவிகிதத்திலேயே உள்ளனர்.

நாம் இதுவரை பேசிய மூன்று பிரிவுகளையும் கவனத்தில் கொண்டால், புறாவினுடைய மூளை சாதாரண மண்வெட்டி போன்று செயற்படுகின்றது. அப்படியாயின் அதன் மீது பிரயோகிக்கப்படும் சக்திக்கு ஏற்ப அது வெட்டும். கழுகின் மூளை முதலைச் சின்னத்துடனான மண்வெட்டியை ஒத்தது. அது அகலமானதுடன் கூர்மையானது. இருப்பினும், அது ஆழத்துக்கு செல்லாது. இருப்பினும், இந்த ஆந்தையிடம் உள்ள மூளையின் செயற்பாடானது அலவாங்கு போன்றது. இது மெல்லியதாக இருந்த போதிலும் ஆழத்துக்கு தோண்டுவதற்கு முடியுமான ஓர் உபகரணமாகும்.

ஆந்தைக் குணவியல்புள்ளவர்கள், தனது சிறப்புத் துறையில் மிக ஆழத்துக்குச் செல்வதற்கான ஆற்றல் காணப்படுகின்றது. இருப்பினும், இத்தகையவர்களிடம் காணப்படும் வசதியான வலயத்தில் இருப்பதற்கான விருப்பம் மற்றும் சூழலுக்கேற்ப மாற்றம் காண்பதற்குள்ள பயம் என்பவற்றால், இவர்களை உட்சாகப்படுத்தும் ஒருவர் இவர்களுடன் இருப்பது அவசியமாகின்றது. இவர்கள் தாம் தோல்வியடையும் என்ற பயத்தின் காரணமாகவே புதிய சவால்களை ஏற்காதிருக்கின்றார்கள்.

இருப்பினும், மிகச் சரியான முறையில் தான் செல்ல வேண்டிய பாதை குறித்து தெரிந்து கொள்ள முடியுமாயின் தான் செல்லும் பாதை சரியானது என்று உறுதி இருக்குமாயின், அவர்களுக்குள் இருக்கும் சந்தேகங்கள் குறைந்துவிடும். இதனால், சரியான முறையில் வழிகாட்டலை வழங்கக் கூடிய பயிற்றுவிப்பாளர் ஒருவருக்கு ஆந்தைக் குணவியல்பு காணப்படும் பிள்ளையை சிறந்த இலக்கு நோக்கி வழிநடாத்த முடியும். இந்தப் பயிற்றுவிப்பாளர் கட்டம் கட்டமாக விளக்கமளித்துக் கொண்டு அவருடன் இணைந்து அவருக்கு வழிகாட்ட வேண்டும்.

இவ்வாறாக நான்கு பிரிவுகளுக்கு ஏற்ப, குணவியல்புகளைப் பிரித்து நோக்கினாலும் அவை ஒருவரிடத்தில் கலந்து காணப்படுவதற்கு இடபாடுண்டு. எது எப்படிப் போனாலும் நீங்களோ உங்களுடைய பிள்ளையோ இந்த நான்கு வகைகளில் எந்த வகையைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்து கொள்வதற்கு உங்களுக்கு ஒரு விளக்கம் கிடைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இருப்பினும், உயிரியல் விஞ்ஞான ரீதியாக இதனை ஆழமாக விளங்கிக் கொள்வதற்கு மிகவும் வெற்றிகரமான முறைமையொன்றும் காணப்படுகின்றது. எந்தவொரு நபருக்கும் தனித்துவமாக காணப்படும் விரல் அடையாளத்தைப் பரீட்சிப்பதுவே அதுவாகும். கையில் உள்ள "நியுரோனுடன்" மூளையிலுள்ள "நியுரோனுக்குத்" தொடர்புள்ளதால் இந்தப் பரிசோதனையின் மூலம் பிள்ளை பிறக்கும் போது காணப்பட்ட மூளையின் சுபாவத்தைக் கண்டறிய முடிகின்றது.

இருப்பினும், சூழலியல் காரணங்களினால் அது மாற்றமடைவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. அது எப்படிப் போனாலும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் கூட இதுபோன்ற உயிரியல் விஞ்ஞான பரிசோதனைகள் மூலம் குறிப்பிட்ட சில விடயங்களுக்காக மனிதர்களை அடையாளம் கண்டுகொள்ளும் முறைமை சமகாலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலே கூறிய பரிசோதனை, "Brain Key" (மூளையின் திறப்பு) பரிசோதனையின் ஒரு முக்கிய பரிசோதனையாகும். இதனூடாக உங்களது பிள்ளையை அடையாளம் கண்டு அவரை வெற்றிகரமான கற்றல் இலக்கை நோக்கி வழிநடாத்த முடியும். அவ்வாறு அடையாளம் காணப்பட்ட பிள்ளை விசேட முறைமையின் கீழ் வழிநடாத்த நல்ல பயிற்றுவிப்பாளர் ஒருவரின் உதவியைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

எனினும், பெற்றோர்களை விடவும் இது தொடர்பில் உளவியல் சித்தாந்தங்களின் அடிப்படையில் நன்றாக செயற்படக் கூடிய கல்வியியலாளர்கள் காணப்படுகின்றார்கள். அத்துடன், தனது பலம் பலவீனங்களை அடையாளம் கண்டு இலக்கு நோக்கி அழைத்துச் செல்ல முடியுமான வழிகாட்டலை பெற்றுக் கொள்ள விருப்பமுள்ள இளைஞர், யுவதிகளாகிய உங்களுக்கும் இந்தப் பரிசோதனை மிக முக்கியமாகும்.

இது தொடர்பில் நீங்கள் ஆர்வம் செலுத்துவதாக இருந்தால், மேலதிக விடயங்களைப் பெற்றுக் கொள்வதற்கு கீழே வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

**கயாத்திரி ஹேமமாலி**
மானிட திறன் விருத்தி ஆலோசகர்
தொ.இல.: 0716658658



# தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட
# எமது இளம் தொழில் முயற்சியாளர்

இளம் சக்திகள் நாட்டின் அபிவிருத்திக்காக இணையுமாயின் அது நாட்டை அபிவிருத்தியை நோக்கி எடுத்துச் செல்வதற்கு சிரமமான ஒரு காரியம் அல்ல. இருப்பினும், வேலையின்மைப் பிரச்சினை தொடர்ந்தும் உயருமாயின் அதிகரிக்கின்ற இளைஞர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில் வாய்ப்புக்கள் உருவாகவில்லையாயின், அது நாட்டை அபிவிருத்தியை நோக்கி எடுத்துச் செல்வதற்கு பெரும் தடையாக அமைகிறது.

இது தொடர்பில் காணப்படுகின்ற சிறந்த தீர்வுதான், தொழில் முயற்சித் துறையை முன்னேற்றுவதாகும். புதிய உற்பத்திகளை முன்னேற்றமடையச் செய்து புதிய சந்தை வாய்ப்புக்களைத் தேடி, சிறந்த தொழில் முயற்சியாளர்களாக மாறுவதற்கு இளைஞர் பரம்பரையினர் வழி நடாத்தப்பட முடியுமாயின் அது ஒரு நாட்டிற்கு அத்தியாவசியமான ஒரு விடமாகும்.

மனிதலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் தொழில் நிர்மாண விருத்தி மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு என்ற வகையில் அதற்காக நாம் செய்யும் வேலைத் திட்டங்கள் ஏராளம். இதன்படி, சுயதொழில் முயற்சிகளுக்காக விருப்பமுள்ள இளைஞர் யுவதிகளுக்கு உந்துதல் வழங்கும் நிகழ்ச்சியாக தொழில்முனைவு அபிவிருத்திப் பயிற்சி நெறி விளங்குகிறது.

இந்த தொழில்முனைவுப் பயிற்சி நெறியின் மூலம் வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தல் மற்றும் அதனை முறையான விதத்தில் நடாத்திச் செல்லல் தொடர்பாக முழுமையாக மூன்று நாட்கள் பயிற்சி வழங்கப்படுவதுடன் அதில் பங்குபற்றி தனது தொழில் வாழ்க்கையை தொழில்முனைப்பாளராக ஆரம்பித்த இளைஞர் யுவதிகள் ஏராளம்.

மனிதலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம் ஊடாக வருடாந்தம் நடைபெறுகின்ற இலங்கையர்களுக்கான தொழில் ஊக்குவிப்பு விருது வழங்கும் விழாவில் ஒவ்வொரு வருடமும் இதுபோன்ற முயற்சியுள்ள இளைஞர் யுவதிகள் பாராட்டப்பட்டு வருகிறார்கள். இந்த வகையில், 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் கம்பஹா மாவட்ட த்தில் எமது பாராட்டுக்குட் பட்ட அதி விசேட தொழில்முனைப்பாளர் ஒருவரை உங்களைச் சந்திக்கச் செய்கின்றோம்.

முட்பாகற்காய் (Spiny gourd) செய்கை மூலம் திறமையான வியாபா ரியாக வாழ்க்கையை வென்ற மினுவாங்கொடயைச் சேர்ந்த இளம் வியாபாரியான இசுரு அவர்கள், அவருடைய வெற்றிப் பாதை தொடர்பாக எம்முடன் கருத்து க்களைப் பரிமாறிக் கொள்கிறார்.

நான் சிறுவயது முதல் ஒரு வியாபாரி யாவதற்கு விருப்பத்துடன் இருந்தேன். நான் இந்த முட் பாகற்காயை முதலில் வளர்க்க ஆரம்பித்தது வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையாகவாகும். முட் பாகற்காய்க்கு சந்தையில் சிறந்த விலை காணப்படுகின்றது. அதேபோன்று, அது மிகச் சிறந்த போசனையுள்ள ஒரு மரக்கறியுமாகும்.

இதனாலேயே வியாபார நோக்கத்தில் இதனைப் பயிரிட முனைந்தேன். இக்காலப் பகுதியிலேயே நான் மனிதலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தினூடாக கம்பஹா மாவட்டத்தில் நடாத்தப்பட்ட தொழில்முனைப்பாளர் பயிற்சிச் செயலமர்விலும் தோட்ட அழங்கரிப்பு பயிற்சிச் செயலமர்விலும் பங்குகொண்டேன்.



அதேபோன்று, முட் பாகற்காய் பயிர்ச் செய்கை சம்பந்தமாக பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொ ண்டுள்ளேன். அது தொடர்பான கையேடுகள் மற்றும் பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்தேன்.

வியாபாரத்தை ஆரம்பித்த காலப்பகு தியில் என்னுடைய முயற்சி மட்டுமே இதில் காணப்பட்டது. இன்று சுமார் 15 பேர் எனக்குக் கீழ் பணியாற்றுகின்றனர். அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் எமது பிரதேசத்தின் விவசாய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வேன்.

இந்தப் பயிர்ச் செய்கை சிறிது சிரமமானதொன்றாகும். இந்த முட் பாகற்காய்க் கொடி ஆண், பெண் என இரு வகையாகக் காணப்படுகின்றது. நீங்கள் கடைகளில் கொள்வனவு செய்கின்ற முட் பாகற்காயில் காணப்படுகின்ற விதைகள் பெரும்பாலும் ஆண் இனத்தைச் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. இதனால்தான் இவ்வாறான வித்துக்களை நாட்டுவதன் மூலம் சிறந்த விளைச்சல் கிடைக்காமல் போகிறது.

இதன் பெண் செடியில் பூக்கள் மலர்வது இராக்காலத்தில் ஆகும். இரவு நேரத்தில் தேன் பூச்சிகள் இல்லாததன் காரணமாக காலை நேரத்தில் இந்தப் பூக்களை மகரந்தச் சேர்க்கையில் ஈடுபடுத்த வேண்டி வருகின்றது. இந்தச் செடி கிளைகள் மூலமாகவே பரவுகின்றது. அதேபோன்று வரண்ட மற்றும் இடைப்பட்ட காலத்தில் இந்த முட் பாகற்காயை சிறந்த முறையில் பயிரிட முடியும்.






ஆரம்ப காலத்தில் ஒரு மரக்கறியாக இந்த முட் பாகற்காயை விற்பனை செய்த போதிலும் இன்று அதனுடன் சேர்த்து வேறு புதிய உற்பத்திகளையும் வெளியிட உத்தேசித்தேன். முட் பாகற்காய் கசப்பான ஒன்று அல்ல. கறியாகவோ, சுண்டலாகவோ, எண்ணெய்யில் வதக்கியோ சமைத்துப் பயன்படுத்த முடியும். இந்தியாவில் இது ஒரு பழ வகையாக உணவுக்கு எடுக்கிறார்கள்.

இந்த விடயங்கள் தொடர்பில் கண்டறிந்து முட் பாகற்காயை இனிப்பான ஒரு பானமாக தயாரிக்கத் தேவையான ஆரம்ப கட்டத் திட்டங்கள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்வதோடு, மொத்த விற்பனை நடவடிக்கைக்கும், வெளிநாட்டு சந்தைக்குள்ளும் நான் கால்பதித்து விட்டேன்.

இருப்பினும், கடந்த கோவிட் தொற்று நோய் காலப்பகுதியில் வெளிநாட்டு ஏற்றுமதிகள் தற்காலிகமாகத் தடைப்பட்டாலும் இதற்காக உள்நாட்டில் காணப்படும் நல்ல சந்தை வாய்ப்பு காரணமாக வியாபாரத்தைச் சிறப்பாக முன்னெடுக்க முடியுமாகவுள்ளது.

அத்துடன், வெளிநாட்டு சந்தையில் பிரவேசிக்கும் போது எனது பொருளின் தரம் குறித்து நான் அதிக கவனம் செலுத்துகின்றேன். ஏனெனில், ஏற்றுமதிக்காக பயிர் செய்யும் போது காணப்படும் தரத்துக்கு ஏற்ப பயிரிட வேண்டியுள்ளது. இதற்காக வேண்டி ஏற்றுமதி அபிவிருத்தி சபையிடமும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றேன்.

இந்த உயர் நிலையை நான் தொடர்ந்தும் வைத்திருப்பதற்காக எந்த நேரத்திலும் தேவையான முயற்சிகளை முன்னெடுக்கின்றேன். அத்துடன், இந்த தொழில் முயற்சியை மேற்கொள்வதற்கு பாரிய மூலதனமொன்று அவசியமில்லை. பாரியளவு மூலதனமொன்று இல்லாமல் தொழில் முயற்சியொன்றை ஆரம்பிக்க முடியாது என்று கூறுபவர்களுக்கு முட் பாகற்காய் பயிர்ச் செய்கை சிறந்ததொரு பதிலாகும்.

தனது வருமானத்தையும் பாதுகாத்துக் கொண்டு ஆரோக்கியமான ஓர் உணவை சந்தைப்படுத்தி தேகாரோக்கியமுள்ள சமூகமொன்றை உருவாக்க பங்களிப்புச் செய்வதற்கு இது போன்ற தொழில் முயற்சியின் மூலம் முடிகிறது.

வாழ்க்கையை வெற்றிகொள்ள யார் மீதும் கை வைக்காது, தனது உழைப்பால் முன்னோக்கிக் கால்பதித்த இந்த படத்திலுள்ள இளம் வியாபாரி திரு.இசுருக்கு நாமும் வெற்றி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



**- உமங்கா சாந்தினி -**
செயற்திட்ட அதிகாரி
மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

# சுய விம்பம் மற்றும் சுய மதிப்பு என்பவற்றைச் சீர் செய்தல்

தனியாள் ஆளுமை விருத்தியின் போது ஒருவரால் இது தொடர்பாக வழங்கப்படுவது எவ்வாறான அங்கீகாரம், எவ்வாறான வரைவிலக்கணம், எவ்வாறான வியாக்கியானம் என்பது மிக முக்கியமானதாகும். தனியாள் ஆளுமை விருத்தி தொடர்பாக நடாத்தப்படுகின்ற கருத்தாடல்களில் பார்க்கப்படுகின்ற சில அடிப்படை எண்ணக்கருக்கள் பல்வேறுபட்டுள்ளன. அவ்வாறென்றால், தான் என்பதும் ***(Slef)*** சுயம் என்பதும் சுயவிம்பம் ***(Self Image)*** சுய எண்ணக்கரு என்பதும் ***(Self-concept)*** சுய மதிப்பு ***(Self-esteem)*** என்பதும் அவற்றுள் சில.

Self எனும் ஆங்கிலச் சொல் சிங்களத்தில் பிரயோகிக்கப்படும் போது அடிக்கடி சுயம், சுய மதிப்பு எனும் சொற்கள் மாறி மாறி இடத்துக்குப் பொருத்தமான முறையில் பயன்படுத்தப்படுவதனைக் காணலாம்.

## சுயம் ( Self ) என்றால் என்ன?

சுயம் அல்லது நான் (மதிப்பு) என்ற சிந்தனைக்கு பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. ஆளுமை விருத்தி மற்றும் சுய மதிப்பு என்பவற்றை விருத்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கின்ற ஒருவருக்கு நான் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். நான் என்பதனை அறிந்து கொள்வதற்கு விரும்பும் ஒருவருக்கு சமர்செட் மோகம் ***(Somerset Maugham)*** எனும் கவிஞரால் எழுதப்பட்ட கவிதை வரிகள் சிறந்த முன்னோடி ஆகும். இந்தக் கவிதை வரிகளின் மூலம் நாம் அனைவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுபடும் ஆளுமைகள் என்பதனை சமர்செட் மோகன் தெளிவுபடுத்துகின்றார்.

ஒவ்வொருவருக்கிடையிலும் ஒவ்வொரு மாற்றங்கள் ஏற்டுபவதற்கு அவர்கள் வளர்ந்த சூழல், அவர்களை வளர்த்தவர்கள் மற்றும் வளர்ப்பு விதம் என்பன பல்வேறு முறையில் தாக்கம் செலுத்துகின்றன. இதனை இந்தக் கவிவரிகள்.

**நீ என்பது நீயே அல்ல**

அவர்கள் என்பது அவர்கள் பிறந்த தேசம் ஆகும்
அவர்கள் நடைபயிலக் கற்ற பள்ளத்தாக்காகும்
அவர்கள் குடித்த பாலும்
அவர்கள் உட்கொண்ட உணவுகளும்
அவர்கள் துயில் கொண்ட கட்டில்களும்
அவர்கள் சிறுபராயத்தில் செய்த விளையாட்டுக்களும்
அவர்களது மூதாதையர்கள் அவர்களுக்கு சொல்லிக் கொடுத்த கதைகளும்
அவர்கள் கேட்ட வீண் பேச்சுக்களும், உளரிய கதைகளும்
அவர்கள் கற்ற பாடசாலைகளும்
அவர்கள் பங்குகொண்ட விளையாட்டுக்களும்,
அவர்கள் வாசித்த கவிதைகளும்,
வணங்கிய அல்லது வணங்காத கடவுள்களும்



**(சமசெட் மோகன்) *(Somerset Maugham)***

பெற்றோர்கள் தாம் விரும்புவது போன்று பிள்ளைகளை வளர்க்க முற்படுவது எந்தளவு தூரம் பயனுள்ளது என்பதையும் அதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்பது தொடர்பான வழிகாட்டல்களையும் இந்தக் கவிதை வரிகள் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளன.

சுயம் என்றால் என்ன? தான் என்பது யார்? என்பதனை விளங்கிக் கொள்வது இலகுவான ஒன்று அல்ல. அது தத்துவார்த்தமான எண்ணக்கருவாகும். தத்துவஞானிகள் வரலாற்று நெடுகிலும் நான் என்றால் யார்? என்பதற்கு தீர்வைத் தேடுவதிலேயே முயற்சி எடுத்துள்ளார்கள்.

அந்த ஆழமான தத்துவார்த்த ரீதியிலான கலந்துரையாடலுக்குள் செல்லாமல் இந்தக் கலந்துரையாடலை போதுமான அளவு நான் என்றால் யார்? சுயம் என்றால் என்ன? சுய மதிப்பு என்றால் என்ன? என்பது போன்ற வினாக்களுக்கு சுருக்கமான முறையில் விடைகளை கண்டறிவதே இக்கட்டுரையினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது கலந்துரையாடலுக்கு பொருத்தமான விதத்தில் நான் எனும் சுயம் என்பது பற்றி, உள்ளார்ந்த ரீதியில் அறிந்து கொள்ள முடிகின்றது. இன்னொரு விதத்தில் கூறினால், உங்களோடு உங்களுக்குள் வேறு ஒரு ஆளுமை உள்ளது. அவ்வாறெனின், உங்களது ஆசைகள் மற்றும் தேவைகளுக்காக அடுத்தவர்களின் ஆசைகளையும், தேவைகளையும் நிறைவேற்றுகின்ற ஒருவராக காணப்படல்.

அவ்வாறெனில், (Authentic) உண்மையான நீ, அத்துடன் உருவாக்கப்பட்ட இன்னொருவன் என்பதனால், கருதப்படுவது யாது? என்பதை இன்னொரு வகையில் கூற முடிகின்றது. அது உன்னுடைய உள்ளார்ந்த உணர்வுகள் என்பதாகும்.

நீ என்பது யார்? மற்றும் இந்த உலகத்துடன் எவ்வாறு ஒன்றித்துச் செல்கின்றாய்? என்பதும் ஆகும். நீ இவ்வுலகில் பிறந்துள்ளது பாரிய சக்தியுள்ள அதிவிசேட ஒரு நபராக என்பது ஓர் அடிப்படை அங்கீகாரமாகும். பூர்வாங்க உள்ளத்துடன் உன்னுள் இருக்கின்ற உண்மை மனிதனே நீ ஆவாய்.

புத்தபெருமானும் இது தொடர்பாக பின்வருமாறு கூறியுள்ளார். “பஹஸ்ஸர மிதன் பிக்கவே. சித்தன் வதாமி”

"இந்த உள்ளத்தை பிரகாசமாக மின்னுகின்ற உள்ளம் என அடையாளப்படுத்துகின்றேன்" புத்தபெருமான் போதித்துள்ளார்.

இது தன்னைப் பற்றிய மிகச் சிறப்பான ஓர் உண்மை வடிவம் ஆகும். அழுக்கடையாததும் பரிசுத்தமானதுமான ஓர் உள நிலையாகும். அதனடியாக புதிதாக கிடைக்கப் பெறுகின்ற அனுபவம் சூழலை அடிப்படையாகக் கொண்டு மேற்கூறிய உள்ளார்ந்த உண்மையான ஆளுமைக்குப் பகரமாக புதிய ஆளுமையொன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இதனை இன்னொரு விதத்தில் கூறினால், யதார்த்தமாக நான் என்பது மனச் சாட்சிக்கு உடன்படுகின்ற உள்ளார்ந்த மனமாகும். (Inner Self)

## சுய மதிப்பீடு (Self Esteem) என்பதனால் கருதப்படுவது யாது?

சுய எண்ணக்கரு (Self Concept) மற்றும் சுய விம்பம் (Self Image) என்பன போன்ற சொற்களினால் அடையாளப்படுத்த ப்படுகின்ற வியாக்கியானங்களை விடவும், மாற்றமான விளக்கமொன்று சுய மதிப்பீடு என்ற சொல்லுக்கு (Self Esteem) வழங்கப்படுகின்றது. முதலில் நாம் அந்த மாற்றம் தொடர்பாக கவனம் செலுத்துவோம்.

சுயமதிப்பீடு என்பது ஒருவர் தன்னைப் பற்றி தான் கொண்டுள்ள உணர்வு பற்றியது என்பதாகும். அவ்வாறெனின், உன்னைப் பற்றி நீ கொண்டுள்ள உண்மையான நிலைப்பாடாகும். நீ எவ்வளவு உன்னை விரும்புகிறாய் அத்துடன், நீ உனக்கு எவ்வளவு அனுமதி வழங்குகிறாய் என்பதைப் பொருத்தே உனது சுய மதிப்பீடு உயர்வானதாகவோ தாழ்வானதாகவோ அமையப் பெறுகின்றது.

உன்னுள் இருப்பது உயர்வான ஒரு சுய மதிப்பீடாயின், உனது ஆளுமை தொடர்பில் பரந்து விரிந்த மதிப்பெண்ணொன்று உனக்குள் காணப்படுகின்றது. இதனால், கருதப்படுவது உண்மையான உன்னுடைய சுயம் என்ன? என்பதை அறிந்துகொண்டு அந்த ஆளுமையை நீ ஏற்றுக் கொள்வதே ஆகும்.




உன்னுள் காணப்படுகின்ற நல்ல குணப் பண்புகளையும் நீ ஏற்றுக் கொள்வாய். நீ உன்னைப் பற்றிய சுய கௌரவம், சுய அன்பு, சுய பெறுமானம் போன்ற உணர்வுகளைக் கொண்டு காணப்படுகின்றாய். உன்னுள் அந்தக் குணப் பண்புகள் காணப்படுவதை நீ நன்கு அறிவதனால், நீ அதுபற்றி ஏனையவர்களுக்கு நிரூபித்துக் காட்ட முயற்சி எடுக்கத் தேவைப்படாது. உன்னுள் உயர்தரமான சுய மதிப்பீடொன்று காணப்படுவதாக உனக்கு நம்பிக்கை இல்லாவிடின், இந்த வினாவை நீயாகவே கேட்டுப் பார். 'நான் அன்பைப் பெற்றுக் கொள்கின்ற ஒருவனாக என்னை நம்பிக்கை கொள்கின்றேனா? நான் பெறுமதி மிக்க ஒருவனாக என்னைக் கருதுகின்றேனா? சுய பெறுமானம் பற்றிய எமது உணர்வானது எமது ஆளுமையின் அடிப்படை அல்லது மூலத்தை உருவாக்குகின்றது. எமது உளவியலின் சீராக்கத்தின் அளவுக்கு வேறு எதுவும் எமக்கு முக்கியமானதல்ல.

சுய மதிப்பீடு தொடர்பில் எமக்குள் இருக்கின்ற அங்கீகாரத்தின் அளவு எமது வாழ்வின் சகல துறைகளுடனும் நேரடியாக தாக்கம் செலுத்துகின்றது. நாம் எம்மை எவ்வாறு அடையாளப்படுத்துகின்றோம். ஏனையவர்கள் எம்மை எவ்வாறு அடையாளப்படுத்துகின்றார்கள் என்பதும் சுய மதிப்பீட்டில் தாக்கம் செலுத்தும். அதேபோன்று, பின்னர் அவர்கள் எம்மை எவ்வாறு கவனிக்கின்றார்கள் என்பதைப் பொருத்தும் சுய மதிப்பீடானது மதிப்பிடப்படுகின்றது.

அதேபோன்று, வாழ்க்கையில் நாம் மேற்கொள்ளும் தெரிவுகளும் அதில் தாக்கம் செலுத்தும். நாம் தெரிவு செய்யும் தொழில்களுக்கும், நாம் யாருடன் நட்புக் கொள்கின்றோம் என்பதிலும் காதல் தொடர்புகளை முன்னெடுப்பதிலும் தாக்கம் செலுத்தும். அதேபோன்று நாம் ஏனையவர்களுடன் தொடர்புகொள்கின்ற விதத்திலும் இது தாக்கம் செலுத்து கிறது. நாம் எவ்வளவு செயல் திறன் மிக்கவர்களாக இருந்தாலும் கூட எமது திறமைகள் மற்றும் சவால்கள் என்பவற்றிலிருந்து நாம் எவ்வளவு தூரம் பயன்பெறுகின்றோம் என்பதனை தீர்மானிப்பதற்கும் சுய மதிப்பீடு தொடர்பான எண்ணக்கரு தாக்கம் செலுத்துகிறது.

அதேபோன்று ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ள நிலைமைகளின் போது நாம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்தும் இது தாக்கம் செலுத்துகிறது. அத்துடன், புத்தாக்க செயற்பாடுகளுக்கு எம்மில் காணப்படும் திறன்கள் தொடர்பிலும் இது தாக்கம் செலுத்துகிறது. அத்துடன், அது எமது நிலைப்பாடு தொடர்பிலும் தாக்கம் செலுத்துவதோடு நாம் எதிர்காலத்தில் பின்பற்றுபவர்களாக இருப்போமா? அல்லது தலைவர்களாக இருப்போமா? என்பதனை தீர்மானிப்பதிலும் இது தாக்கம் செலுத்துகிறது.

எமது சுய மதிப்பீட்டு மட்டம் எவ்வாறு அமையும் என்பதனை தீர்மானிப்பதற்கு ஏற்ப, பொதுவாகவே எம்மைப் பற்றி நாம் கொண்டுள்ள எண்ணகருவைச் சீர் செய்வதற்கும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டு நடாத்துவதன் தன்மையைத் தீர்மானிப்பதிலும் இந்த சுய மதிப்பீடு தாக்கம் செலுத்துகிறது.

சுய மதிப்பீட்டின் தன்மை தொடர்பாக நாம் கொண்டுள்ள எண்ணக்கரு தாக்கம் செலுத்துகிறது. சுய மதிப்பீடு மற்றும் சுய எண்ணக்கரு போன்ற இரண்டு பதங்களும், சில எழுத்தாளர்களால் மாற்றி மாற்றிப் பிரயோகிக்கப்படுவதனை சில புத்தகங்களில் கண்டுகொள்ளலாம். அவ்வாறிருப்பினும், இந்த சொற்களில் உண்மையாகவே மாறுபட்ட இரண்டு கருத்துக்கள் காணப்படுகின்றன. எமது சுய எண்ணக்கரு மற்றும் சுய பிரதி விம்பமானது எம்மைப் பற்றி எமக்குள் காணப்படும் நம்பிக்கை அல்லது பிரதி விம்பமாக கொள்ளப்படுகின்றது. சுய மதிப்பீடு என்பது சுய எண்ணக்கருவிக்கு நாம் எவ்வளவு தூரம் விரும்புகிறோம் என்பதும் நாம் நாமாகவே எந்தளவு அதனை அனுமதிக்கின்றோம் என்பதனையும் அளக்கின்ற அளவீடாகும்.

வேறு ஒரு விதத்தில் அதனை விளக்கினால், நீ உன்னைப் பற்றிக் கொண்டுள்ள மதிப்பீடு எவ்வளவு என்பதாகும். சுய பிரதி விம்பம் என்பது நீர் உம்மை எவ்வாறு காண்கிறீர் என்பது பற்றியதாகும். அவ்வாறே சுய மதிப்பீடு மற்றும் சுய பிரதி விம்பம் போன்ற சொற்கள் இரண்டுக்கும் இடையிலும் காணப்படுகின்ற வித்தியாசத்தை கண்டுகொள்ள முடியுமான முறைமை இவ்வாறு அமைந்துள்ளது.

சுய மதிப்பீடு என்பது நீர் உமக்கு கொடுக்கின்ற ஏதோ ஒன்றாகும். இதனாலேயே சுய மதிப்பீடு என அது அழைக்கப்படுகின்றது. சுய பிரதி விம்பம் என்பதனை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்த முடியும். ஏனையோர் உம்மை எவ்வாறு பின்பற்றுகின்றார்கள் என்பதைப் பொருத்தும் நீர் எவ்வாறு ஏனையவர்களைப் பற்றி எவ்வாறு அனுமானம் செய்கின்றீர் என்பது பற்றியும் ஆகும்.

எமது சுய பிரதி விம்பம் எனும் சுய ஷருபமானது பல்வேறுபட்ட விரிந்த பிரதி விம்பங்கள் மற்றும் நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இவற்றுள் சில தெளிவான விஞ்ஞான சாட்சிகளுடன் காணப்படுகின்றது. அவற்றை இலகுவான முறையில் கண்டறிய முடிகின்றது. (உதாரணமாக - நான் ஒரு பெண் ஆவேன். நான் ஒரு மனோதத்துவவியலாளர்) அவ்வாறே தனது பிரதி விம்பம் தொடர்பில் தொட்டுணர முடியுமான விடயங்களும், அளவீட்டுக்கு உட்படுகின்ற வேறு பல விடயங்களும் காணப்படுகின்றன. (உதாரணமாக- நான் புத்திசாலி. என்னுள் திறமைகள் உள்ளன போன்றவை)

எம்மைப் பற்றி எமக்குள் காணப்படுகின்ற பெரும்பாலான கருத்துக்கள் எம்மால் சிறுபராயம் முதலே நெருக்கமாக்கிக் கொண்ட பிரதானமான அடிப்படைகள் இரண்டின் ஊடாகவே உருவாகியுள்ளன. அவ்வாறெனின், ஏனையோர் எம்மை எவ்வாறு உபசரித்துள்ளார்கள் என்பதற்கு ஏற்பவும், ஏனையவர்கள் எம்மைப் பற்றி எமக்குக் கூறியவைகள் என்ன என்பது தொடர்பிலேயும் ஆகும்.

இந்த வகையில், தெளிவாகின்ற விடயம் என்னவெனில், ஏனையோரினால் நாம் எவ்வாறு பார்க்கப்பட்டோம் என்பதன் அடிப்படையிலும் நாம் இப்போது எம்மை அடையாளப்படுத்துவது எவ்வாறு என்பதிலேயே இந்த இரண்டு விடயங்களும் நிலையாகக் காணப்படுகிறது.

உமது சுய பிரதி விம்பம் என்பது உன்னைப் பற்றி நீ சிந்திக்கின்ற விதத்திலேயே அமைந்துள்ளது. ஏனையவர்களினால் நீர் எவ்வாறு பார்க்கப்பட்டிருக்கின்றாய் என்பதும், அவர்கள் உமக்கு எவ்வாறு பணிவிடை செய்திருக்கின்றார்கள் என்பதையும் வைத்து நீர் கட்டியெழுப்பியுள்ள உனது உள ரீதியான ஒரு சிந்தனையாகும்.

மேலே சொல்லப்பட்ட காரணிகளை அடிப்படையாக வைத்து அந்தக் காரணிகளுக்கு ஏற்ப, நீர் கட்டியெழுப்புகின்ற ஒழுங்குகள் ஆகும். அவ்வாறே நீர் உம்மை ஏனையவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து உம்மால் கட்டியெழுப்பப்பட்டுள்ள உள ரீதியிலான ஒழுங்குகளாகவும் இதனை அடையாளப்படுத்தலாம். இந்த ஆழமான தத்துவார்த்த கலந்துரையாடலுடன் தொடர்புபடாமல், இந்தக் கலந்துரையாடலுக்கு போதுமான அளவு நான் யார்? சுய மதிப்பீடு என்றால் என்ன? சுயம் என்றால் என்ன? என்பது போன்ற விடயங்கள் தொடர்பில் சிறியதொரு விளக்கத்தை வழங்குவதற்கு இங்கு எதிர்பார்க்கின்றேன்.



## உமது சுய மதிப்பீடு குறைவதற்கான உண்மையான காரணிகள்

ஒவ்வொரு நபர்களினதும் சுய மதிப்பீட்டின் பலவீனம் அல்லது எதிர்மறை பிரதி விம்பத்தின் மூலாரம்பம் பெரும்பாலும் சிறுபராயத்துடன் தொடர்புபட்டதாகவே அமைந்துள்ளது. உங்களது வாழ்வில் உங்களுக்கான அனுபவத்துடன் தொடர்புடையவர் யார்? என்று நோக்கினால், அதில் அதிகமாக தாக்கம் செலுத்தியிருப்பவர்கள் உமது பெற்றோர்கள் ஆவர். அவ்வாறில்லாவிடின் உம்மை வளர்த்தவர்களாக இருக்கலாம். பெற்றோரின் எதிர்மறையான நடத்தைகள் மற்றும் எதிர்மறையான கருத்துக்கள் மனிதர்களுடைய சுய ரூபம் மற்றும் சுய மதிப்பீடு என்பவற்றில் வெளிப்படையான தாக்கம் செலுத்தக் கூடியதாக அமைந்துள்ளது. இது விசேடமாக வெளிப்படுவது உணர்ச்சிவசப்படுகின்ற, கவனிப்பாரற்று விடப்படுகின்ற சிறுபராய செயற்பாடுகள், அடக்கு முறைக்கு உட்படுகின்ற பிள்ளைகள் தொடர்பிலேயே ஆகும்.

போதியளவு அன்பு கிடைக்காத பலவீனமான பெற்றோர்களுடைய பிள்ளைகள், பிள்ளையின் அடையாளம் அல்லது சுய எண்ணக்கரு மற்றும் சுய மதிப்பீடு என்பவற்றின் தரத்தைத் தீர்மானிப்பதில் இவை பெரும் தாக்கம் செலுத்துகிறது.

பிள்ளைகளுடைய சிறுபராயம் என்பது முதல் மூன்று அல்லது நான்கு வருட காலப் பகுதியாகும். இக்காலப் பகுதியில் பெற்றோர்களின் அரவணைப்பு எவ்வாறு காணப்படுகின்றது என்பதனைப் பொருத்தே பிள்ளைகளுடைய சுய மதிப்பீட்டு மட்டம் தீர்மானிக்கப்படுகிறது என கல்வி உளவியலாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் அறியவந்துள்ளது.

# சுய மதிப்பீட்டைப் பலவீனப்படுத்துகின்ற வடிவங்களுள் வெட்கம் தொடர்பான எண்ணக்கருவின் தாக்கம்

தான் சமூகத்துடன் நேரடியாகத் தொடர்புபடும் போது தனக்கு எந்தவிதமான பெறுமானமும் இல்லையென்ற எண்ணம் உள்ளத்தில் எழுகின்றது. இந்தத் தாழ்வு மனப்பான்மையே வெட்கம் எனப்படுகிறது.

எம்முள் வெட்க உணர்வு ஏற்படுகின்ற போது மறைந்திருக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. தலையை மறைத்துக் கொள்வதற்கும், தோல் புஜத்தை சுருட்டிக் கொள்வதற்கும், தன்னை மறைத்துக் கொண்டு செயற்படுவதற்கும் முயற்சிப்பது போன்றன வெட்க உணர்வுகளின் செயற்பாடுகள் ஆகும்.

உணர்ச்சி துஸ்பிரயோகம் (***Emotional Abuse***) மற்றும் கவனிப்பாரற்று விடுதல் என்பன வெட்கத்தை அதிகரிப்பதற்கான விடயங்கள் ஆகும். ஏதோ ஒரு வழிமுறையில் தாக்கத்துக்கு உட்பட்ட பிள்ளைகளினுள்ளும் தான் ஏதோ ஒன்றை இழந்துவிட்டதான உணர்வுடையவர்களிடத்திலும், அவமதிப்புக்கும், அவமானத்துக்கும் உட்பட்டவர்களிடத்திலும் வெட்க உணர்வு அதிகரித்து காணப்படுகிறது.

அதுவல்லாது தனக்கு பெற்றோர்கள் வழங்கிய அரவணைப்பு குறித்து பெரும்பாலான பிள்ளைகள் தன்னைத் தூற்றிக் கொள்கின்றார்கள். அதுபோன்ற முறையில் கவனிப்புக் கிடைப்பது நியாயமானதா? அது அவ்வாறு நடந்திருக்க வேண்டுமா? என சில பிள்ளைகள் நம்புகிறார்கள். நான் எனது தாய் சொற்படி நடந்திருந்தால், எனது நண்பர்கள் முன்னிலையில் தாயின் நச்சரிப்புக்கு உள்ளாகாமல் இருந்திருப்பேன். இந்த விதத்தில் சிந்திப்பதென்பது அதிகாரத்தையும், நிருவாகத்தையும் தன்னுடைய கையில் எடுப்பதற்கான ஒரு விருப்பத்தை வெளிக்காட்டுவதாகும்.

இவ்வாறு தனக்குத் தானே குற்றப் பிரேரணையை முன்வைத்துக் கொண்டு இதனை விட சிறந்ததாக தான் செயற்பட்டிருந்தால், இதுபோன்ற விரும்பத் தகாத வெட்கமான சந்தர்ப்பங்களை தவிர்த்திருக்க முடிந்திருக்கும் என சிந்திக்க ஆரம்பிப்பான். நிச்சயமாக இயலாமைக்குட்பட்டு மீண்டும் உண்மையான நிலைக்கு முகம்கொடுப்பதற்குப் உபகாரமாக இவ்வாறான முறையில் நினைத்து, சிந்தித்து அந்த வெட்கத்தைத் தாங்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பார்கள்.

பிள்ளைகள் செய்கின்ற மிகச் சிறிய தவறொன்றுக்கு தொடர்ந்து, நச்சரித்துக் கொண்டிருக்கும் அல்லது விமர்சித்துக் கொண்டிருக்கும் அல்லது தண்டித்துக் கொண்டிருக்கும் பெற்றோரின் அரவணைப்பில் வளரும் பிள்ளைகள் இறுதியில் தான் இவ்வுலகில் பிறந்தது, வாழ்வது மற்றும் செயற்படுவது என்பன தவறாகும் என சிந்திக்க முற்படுகிறார்கள். சில நபர்கள் அவமானங்களுக்கும் வெட்கத்துக்கும் எதிராக போராட முயற்சிக்கின்றார்கள். இது தன்னை நூறு வீதம் முழுமையாக சரியானவர் என்பதனைக் காட்டிக் கொள்வதற்கு எடுக்கும் ஒரு முயற்சியே ஆகும்.

எல்லா மனிதர்களுமே சுய விமர்சனங்களினால் அடிக்கடி அழுத்தங்களுக்கு உட்படுகின்றார்கள். உமது பலவீனங்கள் இருந்தால், அவற்றைக் குறைத்துக் கொண்டு வாழ்க்கையை சிறந்ததாக வளர்த்துக் கொள்வதற்கு உமக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது. நீங்கள் செய்ய வேண்டிய சிறந்த நடவடிக்கை என்னவெனில், நீங்கள் அதுபோன்ற பிரச்சினைகள் மானசீக பலவீனங்கள் என்பவற்றுக்கு உட்பட்டிருக்கின்றீர்களா? என்பதனை முதலில் கண்டறிய வேண்டும். தேவையானால் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து அதனை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

சில நபர்கள் எந்தளவுக்கு சுய மதிப்பீடு குறித்து பலவீனப்பட்டிருக்கிறார்கள் என்றால், அவர்கள் அடைந்து கொள்கின்ற எந்தவொரு வெற்றி குறித்தும் மகிழ்ச்சி கொள்வதில்லை. தனது தோற்றம் குறித்தோ, உடல் அமைப்பு குறித்தோ, தனது முன்வைப்பு குறித்தோ திருப்தியடைய மாட்டார்கள்.

தான் எதிர்பார்க்கின்ற எந்தவொரு இலக்கையும் தற்காலிகமாகவாவது அடைந்து கொண்டு ஒரு சந்தோசத்தைப் பெற்றுக் கொள்கின்ற போது கூட அவர்களுக்குள் இருப்பது உள்ளார்த்தமான தன்னைப் பற்றிய விமர்சனங்களே ஆகும். இதனால், அவர்களுக்குக் கிடைக்கின்ற தற்காலிக சந்தோசத்தைக் கூட கிழித்தெறிகின்றார்கள். நாம் எந்தவகையான சுய மதிப்பீட்டுக்கு உட்படுகின்றோம் என்பதனை இதன் மூலம் அளவீடு செய்து கொள்ள முடியுமாகின்றது.

# சுய மதிப்பீட்டின் தரத்தை அறிந்து கொள்ளல்

நீர் குறைந்த சுய மதிப்பீட்டின் மூலம் அல்லது துரதிஷ்டவசமான உள விமர்சனங்களின் மூலம் உள ரீதியாக தாக்கமுற்றிருக்கின்றீர்களா என்பதைக் கண்டறிவதற்கு கீழ் வருகின்ற வினாக்கொத்து உமக்கு உதவியாக இருக்கும்.

| | **வினாக் கொத்து (சுய பரிசோதனை)** | **ஆம்** | **இல்லை** |
|---|---|---|---|
| 01. | நீங்கள் பாதுகாப்பற்றவராகவும் தன்நம்பிக்கை குறைந்தவராகவும் இருப்பதாக உணர்கின்றீர்களா? | | |
| 02. | உங்களால் இடம்பெறுகின்ற சரியான அல்லது வெற்றிகரமான விடயங்களைக் காட்டிலும் உங்களினால் இடம்பெறுகின்ற தவறான மற்றும் தோல்வியான விடயங்களின் பக்கம் நீங்கள் கூடுதலான கவனம் செலுத்துகின்றீர்களா? | | |
| 03. | அடுத்தவர்களைக் காட்டிலும் தான் சிறந்தவர் அல்ல என்றோ திறமை குறைந்தவர் என்றோ உங்களுக்கு தோன்றுகின்றதா? (நீங்கள் செய்கின்ற அனைத்து விடயங்களும் உயர்ந்ததாக இல்லாதிருப்பதனாலும் மற்றும் நீங்கள் வெளித் தோற்றத்துக்கு தென்படும் விதம் தொடர்பாக) | | |
| 04. | ஏனையவர்களுடைய அன்பு மற்றும் மதிப்பு என்பவற்றை வென்றெடுப்பதற்கு நீங்கள் மேலும் மேலும் கொடுக்க வேண்டும் எனவும், இன்னும் அதிகமாக செயற்பட வேண்டும் எனவும் இன்னும் இன்னும் பண்புகளினால் சிறந்து விளங்க வேண்டும் எனவும் நீங்கள் நம்புகின்றீர்களா? | | |
| 05. | உங்களால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையொன்றில் ஏதாவதொரு விதத்தில் தவறு இருப்பதாக உங்களது உள்ளம் அடிக்கடி நச்சரித்துக் கொண்டிருக்கின்றதா? | | |
| 06. | பாடசாலையிலோ, வேலைத்தளத்திலோ அல்லது விளையாட்டு மைதானத்தில் நீங்கள் வெளிப்படுத்துகின்ற திறமை தொடர்பில் நீங்கள் எப்போதும் உங்களை விமர்சித்துக் கொண்டிருக்கின்றீர்களா? குறை காண்கின்றீர்களா? | | |
| 07. | நீங்கள் ஏனையவர்களுடன் மேற்கொள்கின்ற செயற்பாடுகள் தொடர்பில் உங்களுக்கு விமர்சனங்கள் காணப்படுகின்றதா? (உதாரணமாக - உங்கள் மூலம் இன்னொருவருக்கு சொல்லப்பட்ட விடயம் தொடர்பாக நீங்கள் உங்களையே விமர்சனம் செய்து கொள்கின்றீர்களா? இல்லாவிடின் ஏனையவர்களுடன் நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் சில சந்தர்ப்பங்களில் உங்களது மனம் நொந்துபோய் உள்ளது என்பதாக) | | |
| 08. | உங்களது தொழில், உங்களது தொடர்பாடல் மற்றும் உங்களது வாழ்வின் கட்டங்கள் என்பவற்றின் போது நீங்கள் தோல்வியடைந்து விட்டதாக உணர்கின்றீர்களா? | | |
| 09. | நீங்கள் எல்லா விடயங்களையும் 100 வீதம் முழுமைப்படுத்திவிட வேண்டும் எதிர்பார்க்கின்றீரா? | | |
| 10. | வெற்றிகரமான அல்லது சிறந்த பெறுபேறு கிடைப்பதற்கு நீங்கள் தகுதியற்ற ஒருவர் என நீங்கள் உங்களுக்குள் உணர்கின்றீர்களா? நீங்கள் வெற்றி பெற்ற சந்தர்ப்பங்களில் அல்லது மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பங்களில் உங்களுக்குள் கவலையான சுபாவம் ஒன்று ஏற்படுகின்றதா? | | |
| 11. | மனிதர்கள் உங்களுடைய உண்மையான சுய ரூபத்தை அறிந்துகொள்வார்களாயின் அவர்கள் உங்களை வெறுப்பார்கள் என நீங்கள் பயப்படுகின்றீர்களா? | | |
| 12. | நீங்கள் சமூகத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டால், நீங்கள் கேலிக்கு உட்படுவீர்கள் என்றோ, நிந்திக்கப்படுவீர்கள் என்றோ நீங்கள் எந்நேரமும் வெட்கப்படுகின்றீர்களா? | | |
| 13. | வழக்கமாக நீங்கள் மற்றவர்களுடன் உங்களை ஒப்பீடு செய்து பார்த்து உங்களுக்குள் குறைபாடுகளைக் காண்கின்றீர்களா? | | |
| 14. | நீங்கள் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கண்ணாடியைப் பார்ப்பதைவிட்டும் தவிர்ந்து கொள்கின்றீர்களா? அவ்வாறில்லாவிடின் நீங்கள் கண்ணாடியை அதிகம் பார்த்து உங்களது தோற்றம் நன்றாக இருக்கின்றது என்று பரீட்சித்துப் பார்க்கின்றீர்களா? | | |
| 15. | நீங்கள் கண்ணாடியில் உங்கள் முகத்தைக் காணும் சந்தர்ப்பங்களில் உங்களது தோற்றம் தொடர்பாக தொடர்ந்தும் விமர்சனம் செய்கின்றீர்களா? | | |
| 16. | நீங்கள் எப்போதும் அல்லது எப்போதாவது உங்களது தோற்றம் குறித்து மகிழ்ச்சியடைந்திருக்கின்றீர்களா? | | |
| 17. | உங்களது தோற்றம் தொடர்பிலும் உங்களது சுய குறைபாடுகள் தொடர்பிலும் வெட்கப்பட்டுள்ளீர்களா? | | |
| 18. | உணவு உட்கொள்வது தொடர்பில் முறையற்ற பழக்கமொன்று உங்களிடம் உள்ளதா? (அடிக்கடி உணவை உட்கொள்வதற்கான தேவை அல்லது அதிக உணவு உண்பதற்கான தேவை அல்லது உணவைக் கட்டுப்படுத்தி பசித்திருக்க வேண்டிய தேவை) | | |
| 19. | சமூக உறவை ஏற்படுத்துகின்ற நிகழ்வுகளின் போது ஏற்படுகின்ற குறைபாடுகள் மற்றும் தாழ்வு மனப்பான்மை என்பவற்றைப் போக்கிக் கொள்ள மது அருந்துவதற்கோ போதைப் பொருள் பாவனைக்கோ உங்களை உங்கள் மனம் தூண்டுகின்றதா? | | |



| | ஆம் | இல்லை |
|---|---|---|
| 20. உணவைக் குறைவாக எடுப்பது, போதியளவு தூக்கமின்மை அல்லது தேவைக்கு அதிகமான அல்லது குறைவாக மேற்கொள்கின்ற உடற்பயிற்சி என்பவற்றால், உங்களைப் பற்றி நீங்கள் கவனம் செலுத்துவதற்குத் தவறியுள்ளீர்களா? | | |
| 21. புகைத்தல் மதுப் பாவனை போதைப் பொருள் பயன்பாடு மற்றும் அதிக வேகத்தில் வாகனம் செலுத்துதல் போன்ற நடவடிக்கைகள் ஊடாக சுய அழிவை ஏற்படுத்துகின்ற விடயங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கான எண்ணம் உங்களுக்குள் உள்ளதா? | | |
| 22. நீங்கள் அறிந்தோ அறியாமலோ உங்களுக்கு நீங்களே வதை செய்துகொண்டு இருக்கின்றீர்களா? (உங்களது கையை வெட்டிக் கொள்ளுதல் அல்லது உங்களது தலையை அடித்துக் கொள்ளுதல்) | | |
| 23. நீங்கள் ஒரு ஏமாற்றுக்காரன் என மக்களினால் தூற்றப்படுவீர்கள் என அச்சம் கொண்டுள்ளீர்களா? | | |

நீங்கள் இப்போது மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்புக்களுக்கு ஆம் அடையாளத்தை வழங்கியுள்ள சந்தர்ப்பங்களைக் கணக்கிட்டுப் பாருங்கள். நீங்கள் அந்த அறிவிப்புக்களில் ஐந்து அல்லது அதற்கு அதிகமாக ஆம் எனும் அடையாளத்தை இட்டுள்ளீர்களானால், இந்தப் புத்தகம் வழங்குகின்ற ஆலோசனைகள் செயற்பாடுகள் என்பவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இதன் மூலம் உள்ளார்ந்த விமர்சனத்தை நிறுத்திவிட்டு சுய மதிப்பீட்டை வளர்த்துக் கொண்டு உங்களது ஆளுமையை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுதல் வேண்டும். அத்துடன் உங்களுக்குள் இருக்கின்ற வெட்கத்தைக் குறைத்துக் கொண்டு உங்களது வெற்றி மற்றும் அடைவுகள் என்பவற்றின் உண்மையான மகிழ்ச்சி மற்றும் சந்தோசம் என்பவற்றை விருத்தி செய்துகொள்ள வேண்டும். இதற்காகவேண்டி இந்தப் புத்தகத்தில் அறிமுகப்படுத்தியுள்ள செயற்பாடுகள் உதவிபுரியும்.

குறைந்தபட்சம் நீங்கள் இந்த அறிவிப்புக்களில் 23 இல் ஒன்றிற்கோ ஆம் எனக் கூறி அடையாளம் வழங்கியிருந்தாலும் இந்தப் புத்தகம் உங்களுக்கு உதவி புரியும். ஏனென்றால், இதுபோன்ற எந்த உணர்வும் ஏற்படுவது இயற்கை இயல்பு நிலையோ சிறந்த ஆரோக்கிய நிலையோ இல்லாமையினால் ஆகும்.

நீங்கள் இவ்வுலகில் பிறந்திருப்பது நலன், சக்தி, அறிவாற்றல் என்பவற்றை இயல்பிலேயே பெற்றுக்கொண்ட நிலையில் ஆகும். உங்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டு விட்டால் அதனை வெளியேற்றுவதற்கும் உங்களுக்குள் இயல்பிலேயே திறமை பொதிந்துள்ளது.

எவ்வித வைரஸ் ஒன்று உட்சென்றாலும் அதற்கு எதிராக செயற்படக் கூடிய இயந்திரம் தயார்படுத்தப்பட்டுள்ளது. துரதிஸ்டவசமாக உங்களுக்குள் இருக்கின்ற இந்த இயல்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் ஆத்ம பலம் என்பன பலவீனப்பட்டுள்ளது. இதற்கான காரணம் நீங்கள் பிறந்து வளர்ந்த முறைமையோ உங்களது பலம் தொடர்பாக வழங்கப்பட்ட தவறான வழிகாட்டலோ இருக்கலாம்.

உங்களது கணனியில் வெளிப்படையாக உபயோகிக்கின்ற கருவிகள் (யு.எஸ்.பி. சீ.டீ) கணனிக்குள் வைரஸைக் கொண்டுவருகின்ற போது அதிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு அந்த வெளிவாரியான எதிரியை அழிப்பதற்கு கணனி சக்தி பெற வேண்டும். அவ்வாறில்லாத போது வெளிவாரியான அந்த வைரஸ் பலம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் உங்களது கணனி பழுதடைந்து விடுகின்றது. இதனை அறிந்துகொண்டும் கணனியானது மெதுவாக செயற்படுமாக இருந்தால் அல்லது அலங்கோலமாக செயற்படுமாக இருந்தால், புதிய கணனிப் பாதுகாப்பு சாதனமொன்றை நாம் அதற்குள் செலுத்தி வெளிவாரியான அந்த எதிரியை வெளியேற்றிவிட நடவடிக்கை எடுக்கும்

இது கணனியின் பாதுகாப்பை உறுதி செய்து அதனைப் பலப்படுத்தி புதுப்படுத்துகின்றது. இந்தப் புத்தகமும் இதுபோன்று உங்களுக்கு ஒரு புதிய வாழ்வைக் கொண்டு தரும். ஏதோ ஒரு காரணத்தினால் உங்களது வளர்ப்பு முறை அல்லது கல்வி நடவடிக்கைகள் அல்லது அது போன்ற மோசன நிலைமைக்கு உட்பட்டு உங்களது உள்ளார்ந்த வாழ்வு பலவீனப்பட்டிருக்கும் அல்லது வரண்டுபோய் இருப்பினும் எதிர்ப்புச் சக்தி பலவீனப்பட்டிருக்கும்.

இந்தப் புத்தகத்தில் காணப்படுகின்ற பயிற்சிகளைச் செயற்படுத்தும் போது அது மேலதிகமாக பெறப்படுகின்ற ஒரு சக்தியாக அமையும். அத்துடன், புத்துயிர் அளிக்கப்பட்டு நீங்கள் இயல்பு நிலையை அடைந்து உண்மையாகவே நீங்களாக மாறுவதற்கு முடிகின்றது. காற்றுக் குறைவாக இருந்த சக்கரத்துக்கு மீண்டும் காற்றை நிரப்புவதனால் அது பழைய நிலைக்கு மாறி செயற்படுகின்றது. அதேபோன்று உங்களுக்கும் உங்களுக்குள் இருக்கின்ற இயல்பான சுருசுறுப்பு மற்றும் சக்தியை உருவாக்கிக் கொள்ள முடியும். இதனால், பலமான முறையில் உங்களுக்கு செயல்பட முடிகின்றது.



**பேராசிரியர்**
**தயா ரோஹண அத்துக்கோரல**
(நேர் சிந்தனை விரிவுரையாளர் மற்றும் எழுத்தாளர்)
பணிப்பாளர் - நேர் சிந்தனை அபிவிருத்தி நிறுவனம்
***(INDEPTH)***

# புதிய தொழில்நுட்பத்தை இளம் ஆற்றலுடன் இணைத்த எமது நெல் விவசாயி

– *நாலக்க சேனாதீர* –

ஒரு நாடு முன்னேற்றம் காண்பதற்கு இளைஞர் யுவதிகளின் இளம் சக்தி, விருப்புக்கள் என்பன நாட்டின் உற்பத்தியில் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஒவ்வொருவரும் சேவைத்துறையில் வழங்குனர்களாக நியமனம் பெற்றால் அது இந்நாட்டின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஒரு காரணம் அல்ல.

இலங்கை என்பது ஒரு சிறிய நாடாகும். இங்குள்ளவர்களின் பிரதான உணவு சோறாகும். இதனாலேயேதான் நெற் பயிர்ச் செய்கை இந்நாட்டுக்கு முக்கியத்துவம் பெறுகின்றது. இருப்பினும், இதுவரையில் இந்த நெற்பயிர்ச் செய்கை பாரம்பரிய முறைமையைப் பின்பற்றியே முன்னெடுக்கப்படுகின்றது. எமது நாட்டில் பெரும்பாலான நெல் வயல்கள் தரிசு நிலங்களாக விடப்பட்டிருப்பதற்கு உழைப்பு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினையே காரணமாகும்.

நாட்டில் அதிகரித்து வரும் இளைஞர்களுக்கான வேலையின்மைக்கு தீர்வு இல்லாவிடினும், இதுவரையில் இளைஞர், யுவதிகள் வயல்களின் பக்கம் தமது பார்வையை திருப்பவில்லை. இருப்பினும், உலகத்தையே சூழ்ந்துகொண்ட கொரோனா தொற்றினால் எமது நாட்டிலுள்ள பெரும்பாலானவர்கள் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கையின் பக்கம் முன்னரைவிட விசேட கவனம் செலுத்தினர். இருப்பினும், நெற் பயிர்ச் செய்கை என்பது ஒரேயடியாக செய்கை பண்ணும் ஒன்றல்ல.

சமூக ஊடகங்கள், கணனி மற்றும் வேறுபட்ட கனவுலக இளைஞர் நிகழ்ச்சிகளில் சிக்குண்டுள்ள இளம் சந்ததியினரை நெற் பயிர்ச் செய்கையில் இணைத்துக் கொள்வது இலகுவான காரியமல்ல.

இருப்பினும், உரிய காலத்தில் மழை நீரைப் பெற்றுக் கொள்ள முடியுமான சிறந்த காலநிலையொன்று நிலவுகின்ற ரம்யமான ஒரு நாடே இலங்கை. இந்நாட்டிலே தரிசு வயல் நிலங்களை நோக்கி எதிர்பார்ப்பற்ற முறையில் பார்த்திருப்பதை விட்டுவிட்டு, அவற்றை நாட்டின் அபிவிருத்தியில் ஈடுபடுத்துவதற்கும், இளைஞர்களுக்கு தலைமைத்துவத்தை வழங்குவதற்கும் முடியுமான ஓர் இளைஞர், அண்மையில் சமூக ஊடகம் ஒன்றினூடாக வெளிப்பட்டார்.

இலங்கையிலுள்ள தரிசு வயல்களில் பயிரிடுவோம் ஒன்றுபடுங்கள் என இளைஞர் சமூகத்துக்கு அழைப்புவிடுத்து சமூக ஊடகத்தில் புதிய பக்கமொன்றை புரட்டிய இந்த இளைஞரை சுற்றி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ளவர்கள் ஒன்றுபட்டார்கள். அவர்கள் அனைவரினதும் உதவி ஒத்தாசைகளைப் பெற்றுக் கொண்டு எமது நாட்டின் தரிசு வயல் நிலங்களில் பயிரிடவும், நெற் பயிர்ச் செய்கைக்கான புதிய தொழில்நுட்பங்களை சேர்த்துக் கொள்வதற்கும் இளைஞர் யுவதிகளை ஒன்றுதிரட்டிய இந்த இளைஞர் நாலக்க சேனாதீர என்பவராவார். இவர் தனது கருத்துக்களை இவ்வாறு பகிர்ந்து கொள்கின்றார்.

உங்களுக்கு இதுபோன்ற ஒரு யோசனை எப்படித் தோன்றியது?

**நாலக்க அவர்கள் :**

நாம் அழகான ஒரு நாட்டிலே பிறந்தோம். இலவசக் கல்வியைக் கற்றோம். நாட்டினுடைய அமைவிடத்தைப் பொருத்து எந்தவொரு பயிரையும் இங்கு வளர்க்க முடியும். இதுபோன்ற ஒரு நாட்டில் தரிசு வயல்கள் இருப்பதும், இதுபோன்ற ஒரு நாட்டில் இளைஞர்கள் வேலையின்றி தோல்வியடைந்து இருப்பதும் ஏன்? என்று சிந்தித்தேன்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க புராதனப் பொருட்களில், புராதன நூல்களில் நாம் எமது கடந்த கால பெறுமையைப் பற்றி அறிந்திருந்தோம். இருப்பினும், அடிக்கடி ஏற்பட்ட ஆக்கிரமிப்புக்களினூடாக அடிமைச் சமூகமாக மாறினோம். நாட்டின் காணிகளைத் துண்டாடினோம். யுத்தமொன்று ஏற்படுத்தப்பட்டது. எமது இளமைக் காலத்தில் மீண்டுமொரு யுத்தத்தை சந்திக்க தேவைப்படாதென்றே எனக்குத் தோன்றியது. அதேபோன்று, இந்த நாட்டைக் கட்டியெழுப்ப தேவைப்பட்ட போதும் அதனை ஆரம்பிக்க ஒருவர் தேவை என்பதை உணர்ந்தேன்.

ஒரு விடயத்தை ஆரம்பித்தால், அதனைக் கொண்டு செல்வதற்கு உரியவர்கள் இருக்கின்றார்கள் என்பதனை நான் அறிந்திருந்தேன். ஆரம்பிப்பதற்கான உந்துதலை வழங்கினால் மட்டும் போதும் என்று நினைத்தேன்.



அதனைப் புதிய சிந்தனைகளுடன் புதிய தலைமுறைக்கு உணரும் விதத்தில் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். எனது எண்ணங்களை நவீன இளைஞர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என நினைத்தேன். நான் பத்திரிகைகளுக்கு கவிதை வரிகளை வடித்துள்ளேன். கவிதைப் புத்தகம் ஒன்றையும் எழுதியுள்ளேன். இலங்கையில் அழகான இடங்களையுடைய புகைப்படங்களையும் எடுத்தேன். சிறந்த திரைப்படங்களை தொடர்ந்து பார்த்தேன். இலங்கையின் பொருளி யல், அரசியல் மற்றும் நாடு பற்றி நன்கு அறிந்த படித்த புத்தி ஜீவிகளுடன் தொடர்பு வைத்திருந்தேன். பணம் சம்பாதித்தேன். நாட்டுக்கு இன்றியமையாத ஒருவராக மாற வேண்டும் என்று நினைத்தேன். எனது பெயர் இந்த நாட்டில் பதிக்கப்பட வேண்டியதொரு வேலையை செய்ய வேண்டும் என ஆசைப்பட்டேன். அவ்வாறு எனது பெயர், மனித உள்ளங்களிலேயே பதியப்பட வேண்டும் எனவும் விரும்பினேன். எப்போதாவது ஒரு வேலையில் இணையத்தை உரிய முறையில் பயன்படுத்தி சமூகத்துக்கு பிரயோசனமான ஒன்றைச் செய்வேன் என நினைத்தேன்.

எமது கிராமத்தில் அறிவுள்ளவர்கள் இருக்கின்றார்கள். 2019 வரை கிராமத் துக்கு நீர் வசதி கிடைக்கவில்லை. இருப்பினும், நாம் ஒன்றுபட்டு கால்வாயைப் புனர்நிர்மாணம் செய்து நீரைப் பெற்றோம். கிராமத்திலுள்ள எவருக்கும் இதனை எப்படி செய்வதென்பது குறித்து எந்தவித சிந்தனைகளும் இருக்கவில்லை. இருப்பினும், இணையத்தின் ஊடாக விசித்திரமான சிலர் ஒன்றுபட்டோம். வெளிநாடுகளிலுள்ள பொறியியலாளர்கள், டுபாயிலுள்ள எமது சகோத ரர்களும், எமது நாட்டிலுள்ள தரிசு வயல்களை பயிர் செய்ய முன்வந்தார்கள்.

எமது நாட்டு மக்கள் எப்போதும் ஒற்றுமையானவர்கள். யுத்தத்தின் போதும், சுனாமியின் போதும் எல்லோரும் ஒன்றுபட்டார்கள். அதேபோன்று ஒரு மரண நிகழ்வின் போதும் நன்மையான விடயங்களின் போதும் ஒன்றுபட்டார்கள். அப்படியான மனிதர்கள் நாட்டை அபிவிருத்தி செய்கின்ற இதுபோன்ற சந்தர்ப்பத்தில் ஒன்றுபட்டு நாட்டுக்கு சேவை செய்வது அவர்களது கடமையாகும்.

வாழ்க்கை தொடர்பாக எனக்கு நிறைய அனுபவங்கள் உள்ளன. பாடசாலைக் கல்வியின் பின்னர் நான் தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் இணைந்துகொண்டேன். நாடக உருவாக்கம் மற்றும் புகைப்படப் பிடிப்பு பற்றியும் கற்றுக் கொண்டேன்.

2009, 2010 ஆம் ஆண்டுகளில் இளைஞர் விருது வழங்கும் விழாவில் சிறந்த நடிகராக தெரிவானேன். 2017 ஆம் ஆண்டில் "பராக" எனும் கவிதைப் புத்தகத்தை எழுதினேன். அதேபோன்று பல்வேறு தொழில்களைச் செய்துள்ளேன். வியாபார மேம்பாட்டு நிகழ்ச்சிகளைச் செய்துள்ளேன். இதன்காரணமாக நான் அதிகமான மனிதர்களை அறிந்துகொண்டேன். எனது இளமைக் காலத்தை அர்த்தமுள்ளதாக கழித்தேன். இந்த விடயங்கள் அனைத்தும் எனது இந்த முயற்சிக்கு பெரிதும் உதவின.

இந்நாட்டில் நிலையான அபிவிருத்தியொன்றை ஏற்படுத்த வேண்டுமெனில், இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டும். நாம் வில்பத்துவில் மரங்களை நட்டினோம். கிராமத்தின் குப்பை மேடொன்றை அகற்றினோம். இவையனைத்தையும் இளைஞர் சமூகத்துடன் இணைந்தே செய்தோம்.

இன்று சமூக ஊடகங்களுடன் இணைந்திருந்த பெருமளவிலானவர்கள் என்னுடன் இருக்கின்றார்கள். எமது நாட்டிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு உலகின் நாளாபக்கத்திலுமுள்ளவர்கள் உதவி செய்கின்றார்கள். நாம் பயிரிட வேண்டிய உள்ளூர் அரிசி இந்த பூமியிலேயே இருக்கின்றது. வெளிநாடுகளிலிருந்து கொண்டு வந்த விதைகள் மூலமாக உள்நாட்டு விதைகள் அழிந்துபோகின்றன. இதனால் நாம் இந்த நாட்டிற்கே உரித்தான அரிசியை உற்பத்தி செய்வதற்கு தொடர்ந்தும் ஊக்கப்படுத்துகின்றோம்.

இந்த நாட்டை அரிசியினால் தன்னிறைவடையச் செய்து விவசாயத் துறைக்கு புதிய தொழில்நுட்பத்தை இணைத்துக் கொண்டும் இளைஞர் வேலையின்மையை இல்லாமல் செய்து அபிவிருத்திப் பாதையை நோக்கி இந்த நாட்டை ஒன்றுபடுத்துவது என்னுடைய பிரார்த்தனையாகும்.

**– எரந்ததீ ரந்தெனிய –**
தொழில் வழிகாட்டல் அதிகாரி,
மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்



**இளமையின் உதிப்பு உலகிற்கு அதிஷ்டமாகும்**

மலரை நாடும் தேனீயின் காதல் கதையும்
கேட்கின்ற மலரின் மகரந்த வசியமும்
சுவை தேடும் பட்டாம் பூச்சிகளின் பூஞ்சிரிப்பும்
கனவைக் கலைக்கும் காதல் சுவைக் கசிவும்

காத்து வளர்க்கின்ற விவசாய நிலத்தின் பச்சை வர்ணமும்
ஏறி இறங்கும் கதிரவனின் அதிஷ்டமும்
ஆடிப்பாடும் இந்த அழகான பச்சிகளும்
எடுத்துச் செல்ல வருகிறதா நெல் மணி ரத்தினத்தை

சிந்திக்கின்ற முயற்சியுள்ள பிள்ளைகள் போலும்
எழுச்சியுற்று வளரும் இவ்விலங்கைத் தாயைப் போலும்
நாட்டுக்கும் தேசத்துக்கும் பெறுமதி வாய்ந்த நீல மாணிக்கம் போலும்
இளமையின் உதிப்பு உலகிற்கு அதிஷ்டமாகும்

**– எரந்ததீ ரந்தெனிய –**

# நீங்கள் ஜப்பானில் தொழில் வாய்ப்புப் பெற விரும்புகின்றீர்களா?

ஜப்பான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான உறவில் மேலும் ஒரு வளர்ச்சி மிக்க சந்தர்ப்பத்தை இலங்கை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஊடாக இந்த வாய்ப்பு உருவாகியுள்ளது. இதன் மூலம் தொழில்நுட்பப் பயிற்சியாளர்களாக இணைந்து கொள்வதற்கு இலங்கையைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு வாய்ப்பு உருவாகியுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் காணப்படுகின்ற இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தின் நிகழ்ச்சிகள் ஜப்பானுடன் இணைந்து முன்னெடுக்கப்படுகின்றன. இதனால், இலங்கை இளைஞர் யுவதிகள் இலவசமாக இந்த நிகழ்ச்சிகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இந்த நிகழ்ச்சிகளில் பங்குபற்றுபவர்களிடம் எந்தவிதக் கட்டணமும் அறவிடப்படுவதில்லை. இணைப்புக் கட்டணமும் அறவிடப்படாது விமானப் பயணச் சீட்டும் இலவசமாகவே வழங்கப்படுகின்றது.

ஜப்பானினால் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டம் New TITP என்ற சுருக்கப் பெயரினால் அழைக்கப்படுகின்றது. இதனுடைய விரிவான கருத்து Technical Intern Training Programmer என்பதாகும்.

தொழில்நுட்ப உள்ளகப் பயிற்சித் திட்டம் என்பதனால் அறியப்படுவது, இளம் வயதிலுள்ள விசேடமாக திருமணமாகதவர்களை ஜப்பானுக்கு அழைத்துச் சென்று தொழில் ஒன்றில் அமர்த்தி அந்தத் தொழிலைக் கற்றுக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும், அதேவேளை ஜப்பான் மொழி தொடர்பாக தொழில் ரீதியான தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமாகவும் ஆகும்.

ஜப்பானுக்குள் இந்த முறைமை ஊடாக தொழிலாளர்களை அழைத்து வருகின்ற நிறுவனங்கள் பல காணப்படுகின்றன. இந்த நிறுவனங்கள் ஜப்பானின் OTIT (Onergeay Technical Intern Training) நிறுவனத்தினால் அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அது ஜப்பான் நாட்டின் தொழில் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற ஒரு நிறுவனமாகும். இந்த நிறுவனத்தினால் சிறப்பு விருது பெற்ற ஒரு நிறுவனமாக Interntional Manower Organiz ation Japan (IM Jappan) காணப்படுகின்றது. இதனுடன் இணைந்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இந்த TITP யின் கீழ் தொழிலாளர்களை ஜப்பான் நாட்டுக்கு அனுப்பி வைக்கின்றது.

**வேலைவாய்ப்புக் காணப்படுகின்ற தொழிற்துறைகள்**

1. பராமரிப்பாளர் ஆண் - பெண்
2. கட்டிட நிர்மாணத்துறை
3. உற்பத்தித் துறை
4. விவசாயத் துறை

ஜப்பானில் தொழில்நுட்ப உள்ள தொழில் ஒன்றில் ஈடுபடுவதற்கு கீழ் வரக் கூடிய தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். இந்தத் தகைமையானது உயிரியல் விஞ்ஞான ரீதியிலான, கல்வி ரீதியிலான, உடற்தகைமை ரீதியியாக வகைப்படுத்த முடியும்.

**உயிரியல் ரீதியாக :**

வயது - 18 முதல் 29 வருடங்களுக்கு இடைப்பட்டது.

உயரம் - ஆண் 160 செ.மீ. பெண் 150 செ.மீ.

தெளிவான கண் பார்வை

சாதாரண பார்வை 16x8

கை, கால் என்பவற்றில் 10 வீதம் 20 விரல்கள் காணப்படல்

இதனை விடக் கூடவும் கூடாது, குறையவும் கூடாது.

**உடலியல் சமநிலை :**

தலையிலிருந்து கால் வரை சிறந்த சமநிலையுடன் கை, கால்களை விரிப்பதற்கு முடியுமாக இருத்தல். அத்துடன், இலகுவாகவும், நிமிர்ந்து நிற்பதற்கும் கை, கால்களை மேல், கீழ் நோக்கி அசைப்பதற்கு முடியுமாக இருத்தல்.

**கல்வி நிலை:**

தொடர்ச்சியாக 13 வருடங்கள் பாடசாலைக் கல்வியைப் பெற்றிருத்தல் வேண்டும். இதனை உறுதிப்படுத்துவதற்காக உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய சான்றிதழ் காணப்படுதல் வேண்டும். உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவரா இல்லையா என்பது குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை.



**ஜப்பானிய மொழிப் புலமை**

பராமரிப்புத் தொழிலுக்காக ஜப்பான் மொழிப் புலமைப் பரீட்சையில் எண். 4 அடைவுச் சான்றிதழ் இருத்தல் அவசியமாகும். இந்தச் சான்றிதழ் ஜப்பான் நாட்டினால் விநியோகிக்கப்படுகின்ற ஒன்றாகும். இலங்கையில் ஜப்பான் மொழி தொடர்பாக JCTT மற்றும் NAT ஆகிய இரு பிரதான பரீட்சைகள் நடைபெறுகின்றன. இந்தப் பரீட்சையை நடாத்துவதற்காக ஜப்பான் அரசாங்கம் இலங்கைக்கு அனுமதி வழங்கியுள்ளது. பராமரிப்பு சேவை தவிர்ந்த ஏனைய தொழில்களுக்காக ஏனைய தொழில்களுக்காக ஜப்பான் மொழிப் புலமை தொடர்பாக எண்.5 அடிப்படைச் சான்றிதழ் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

**உடலியல் ரீதியிலான தகைமை**

ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் அடிப்படைச் சான்றிதழ்களான உயிரியல் விஞ்ஞானம் மற்றும் கல்வித் தகைமைகள் போன்ற இருத்தல் அவசியமாகும். இவ்வாறு தகுதி பெறுகின்ற ஒருவர் உடலியல் தகுதிகாண் பரிசோதனை ஒன்றிற்கும் அழைக்கப்படுவார். இதன்போது ஓட்டம் மற்றும் உடற் பயிற்சிகள் இரண்டு அடங்கிய முறைமையிலான செயற்பாடொன்றை குறித்த நேரத்துக்குள் செய்து காட்ட வேண்டும்.

**ஓட்டம் :**

ஆண்கள் 3000 மீட்டர் 15 நிமிடத்துக்குள்

பெண்கள் 1500 மீட்டர் 10 நிமிடத்துக்குள்

**ஜம்மிய அப் :**

ஆண்கள் 35 பெண்கள் 20 DCU அடித்தல் போன்றதொரு பயிற்சியாக கொள்ளப்படுகிறது.

## *Sitp*

ஆண்கள் 30 உம் பெண்கள் 15 உம் வான்நோக்கிய பார்வையும், நிலத்தில் சமாந்திரமாக நிமிந்த நிலையில் சாய்ந்து உடம்பின் இரு பகுதிகளை 900 இற்கு நேரடியாகக் கொண்டு வருவதே இப்பயிற்சியாகும்.

கட்டுமாணத்துறையில் விண்ணப்பித்தவர்கள் 25 கிலோ கிராம் நிறையுள்ள ஒரு பொருளைத் தூக்கிக் கொண்டு பயணித்து ஒரு இடத்தை அடைய வேண்டும். மீண்டும் அப்பொருளை அவ்விடத்திலிருந்து எடுத்துச் செல்கின்ற பணி இடம்பெறுகின்றது.

அத்துடன், பலஞ்சியில் ஏறுதல், அதில் நடாத்தல் மற்றும் அதிலிருந்துகொண்டு வேலை செய்தல் என்பன இங்கு பரீட்சித்துப் பார்க்கப்படும். இந்தப் பரீட்சையின் பின் மீண்டும் கணித வினாப் பத்திரமொன்று மற்றும் ஜப்பான் மொழி தொடர்பான வினாப் பத்திரமொன்றும் வழங்கப்படும்.

இந்தக் கணித வினாப் பத்திரம் சாதாரண கணித முறைமைகளை உள்ளடக்கிய ஒன்றாகும். அது சாதாரண சாதாரண தரப் பரீட்சைக்கு நிகரானது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நாடு பூராகவும் பரந்துள்ள பயிற்சி நிலையங்களில் தற்பொழுது ஜப்பான் மொழிப் பயிற்சி நெறிகளை ஆரம்பித்துள்ளது. வார நாட்களில் ஐந்து நாட்களிலும் வார இறுதி நாட்களில் இரண்டு நாட்கள் என வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

அதன் மூலம் ஜப்பான் மொழிப் புலமை எண்.4 பரீட்சை வரை கற்பிக்கப்பட்டு பரீட்சைக்கு அமர்த்தப்படுகின்றார்கள். இதற்காக வேண்டி ரூபா. 20 ஆயிரம் அளவு கட்டணம் அறவிடப்படுகின்றது. இதனை மாதாந்த தவணை முறைமையில் செலுத்த முடியுமாக உள்ளது.

**வைத்தியப் பரிசோதனை :**

உடலியல் தகுதிகாண் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றில் தெரிவாகிய வரையறுக்கப்பட்ட பயிற்சி பெறுநர்கள் வைத்தியப் பரிசோதனைக்கு முகம்கொடுத்து அதில் தேர்ச்சியடைவது கட்டாயமாகும். வைத்தியப் பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் நான்கு மாதங்கள் அவர்கள் பயிற்சிக்குட்படுத்தப்படுவார்கள். இந்தப் பயிற்சி நடைபெறுகின்ற காலப் பகுதியில் ஜப்பான் செல்ல இரு வாரங்களுக்கு முன்னர் மீண்டும் வைத்தியப் பரிசோதனைகளுக்கு முகம்கொடுத்து தேர்ச்சியடைவது கட்டாயமானது.



இந்த சகல பரீட்சைகளிலும் தேர்ச்சி பெறும் ஒருவருக்கு விமானப் பயணச் சீட்டு இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தினாலும், ஜப்பான் அரசாங் கத்தினாலும் இலவசமாக வழங்கப்பட்டு ஒரு குழுவாக ஜப்பான் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

பணியகத்தில் பதிவு செய்து ஜப்பானுக்குச் செல்லும் பயிற்சியாளர்களுக்கு ஜப்பானின் ஐ.எம். ஜப்பான் நிறுவனத்தினால் ஒரு மாத கால மேலதிக பயிற்சி வழங்கப்படும். ஜப்பான் பிரதிநிதிகள் குறித்த நிறுவனத்தில் பணியாற்றுகின்ற அதிகாரிகள் மற்றும் பணியகம் என்பன இணைந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு
தொடர்ச்சியான 4 மாதகால வதிவிடப் பயிற்சி நெறியொன்று வழங்கப்படும். இந்தப் பயிற்சி நெறியானது ஜப்பான் மொழி, தொழிற்பயிற்சி, ஜப்பான் கலாசாரம் பற்றியதாகும்.

ஜப்பான் நாட்டில் தொடர்ச்சியாக மூன்று வருடங்களும், அத்துடன் மேலும் இரண்டு வருடங்கள் அடங்களாக ஐந்து வருட வரையறுக்கப்பட்ட தொழிலாளர்களாக வாழ்வதற்கு இந்தப் பயிற்சி நெறியை வெற்றிகரமாக பயில்வது அவசியமாகும்.

பணியகத்துக்குச் சொந்தமான இரத்தினபுரி பயிற்சி நிலையத்தில் இந்தப் பயிற்சி நடைபெறுகின்றது. இக்காலப் பகுதியில் பயிற்சி பெறுகி-ன்றவர் தனது உணவு, உடை, மருத்துவம் மற்றும் ஆரோக்கியத்துக்குத் தேவையான பொருட்களுக்கான செலவுகளை மாத்திரம் ஏற்க வேண்டி இருப்பர். இந்த செலவீனமானது நான்கு மாத காலத்துக்கும் சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய் அளவில் அடங்கும்.

ஜப்பானில் பயிற்சி பெறும் ஒரு மாத காலத்துக்கு 6 ஆயிரம் ஜப்பானிய யென்கள் மாத்திரம் வழங்கப்படும். அதனையடுத்து வருகின்ற ஒவ்வொரு மாதத்துக்கும் 135000 யென்கள் சம்பளமாக இந்த வரையறுக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பயிற்சியாளர்கள் பெறுவதற்கு தகுதி பெறுகின்றார்கள்.

தன்னுடைய தனிப்பட்ட செலவுகள் போக, குறைந்த பட்சமாக 9 லட்சம் யென்களை கையில் மீதம் வைத்துக் கொள்ள முடியுமாகும் என இந்த நிகழ்ச்சியின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பளத்துக்குள் அடங்காதவையாக கொள்ளப்படும். ஒவ்வொருக்கும் கிடைக்கப் பெறும் தொழிலைப் பொருத்து இந்தப் பெறுமதி வித்தியாசமடையலாம். இதனால், இந்தப் பெறுமானத்தை நிச்சயித்துக் கூற முடியாது. ஜப்பானின் தொழிலாளர் சட்டத்துக்கு அமைய இந்த சகல கொடுப்பனவுகளும் கிடைக்கப் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக்கு தற்பொழுது பெறுமளவிலான பராமரிப்புச் சேவை வழங்குனர்களுக்கான தொழில்வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்தப் பராமரிப்புச் சேவையை நிரப்புவதற்கு பயிற்சி பெற்ற பெண்கள் இன்னும் எம்மோடு தொடர்புகொள்ளாது இருக்கின்றனர். பராமரிப்பு சேவைக்குச் செல்லும் பெண்கள் ஜப்பான் நாட்டில் முதலாவது வருடத்தில் ஜப்பான் மொழிப் புலமைக்கான எண்.3 பரீட்சைக்குத்தோற்ற வேண்டியுள்ளனர்.

இந்தப் பரீட்சையில் சித்தியடையத் தேவையான பாடநெறி இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது. இதுவரையில் பணியகத்தினால் அனுப்பப்பட்டுள்ள பாராமரிப்புச் சேவைப் பணியாளர்களில் பெரும்பாலானவர்கள் இந்த எண். 3 சித்தியைப் பெற்றுள்ளனர். ஐ.எம். ஜப்பான் மற்றும் பணியகம் என்பவற்றுக்கிடையிலான
உடன்படிக்கைக்கு ஏற்ப இந்தப் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் ஐந்து வருட சேவைக் காலத்தை நிறைவு செய்து கொண்டு இலங்கைக்குத் திரும்பும் போது அவர்களுக்கு ஒரு மில்லியன் யென்கள் சன்மானமாக வழங்கப்படுகின்றது. இந்தத் தொகை இலங்கைக்கு வருகை தந்ததன் பின்னர் வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வழங்கப்படுவதற்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இவ்வாறு வருகை தருகின்றவர்களது எதிர்கால பொருளாதாரப் பாதுகாப்புக்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றுக்காக அவர்கள் மீண்டும் உட்படுத்தப்படுவார்கள்.



**– மங்கள ரந்தெனிய -**
பிரதிப் பொது முகாமையாளர்,
இலங்கை வேலைவாய்ப்புப் பணியகம்



## பாத்கண்டே சங்கீத வித்துவான் பரீட்சையை இலங்கைக்கு கொண்டுவந்த சங்கீத மேதை கலாநிதி

# பிரேமதாச முதுன்கொட்டுவ



**பிரேமதாச முதுன்கொடுவ**

சங்கீதம் என்பது ஓர் உலக மொழியாகும். அதேபோல் மனித உள்ளங்களை வசியம் செய்யும் ஒரு பாடமாகும். சங்கீதம் என்பதற்கு வாத்தியம், பாடல், நடனம் போன்ற முத்துறைகளும் உள்ளடங்குவதாக "சங்கீத ரத்னகார" எனும் புராதன நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வளவுதூரம் மனிதர்களின் உள்ளங்களுக்கு நெருங்கியதாக காணப்படும் சங்கீதமெனும் இப்பாடம் இன்று பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு வரையில் கற்பிக்கப்படும் ஒன்றாக மாறியுள்ளது. அதேபோன்று சங்கீதத் துறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற தொழில் துறைகள் ஆயிரக் கணக்கில் காணப்படுகின்றன. சங்கீதத் துறையில் ஈடுபாடு காட்டக்கூடிய உயர் திறமையுள்ள மாணவர்கள் பலர் உள்ளனர்.

இலங்கையில் சங்கீதக் கல்வியை மேம்படுத்த இதுவரை நிறைய சங்கீத வித்துவான்கள் காணப்பட்டாலும், அவர்களுள் இன்று உயிருடன் இருப்பவர்கள் மிகச் சிலரே. விசேடமாக இந்தியாவின் உத்திரப் பிரதேச பாரதீய சங்கீதத்தை ஒரு பாடமாக பாடசாலைக் கல்வியில் சேர்த்தல், அழகியல் பல்கலைக்கழகத்தை உருவாக்குதல், பாத்கன்டே வித்துவான் பட்டப்படிப்பை இலங்கையிலிருந்து தொடர்வதற்கு இலங்கையர்களுக்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்க பாடுபட்டவர் போன்ற பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட சங்கீத வித்துவான் கலாநிதி பிரேமதாச முதுன்கொடுவ அவர்கள், இத்தகைய சிலருள் ஒருவராவார்.

இதனால், சாதனையாளர்களைத் தேடிச் செல்லும் பாதையில் இம்முறை நமது தரிப்பிடமாக கலாநிதி பிரேமதாச முதுன்கொடுவ அவர்கள் காணப்படுகின்றார்கள்.

**ஹசர :**

உங்களது சங்கீத வாழ்வின் ஆரம்பம் பற்றிப் கூறினால்,

**முதுன்கொடுவ அவர்கள்:**

நான் முதலாவது கொ. தகம்பல்ல மகா வித்தியாலயம், கொஸ்கம சுமேத வித்தியாலயம் ஆகியவற்றுக்கும் உயர் கல்விக்காக ஹொரணை சிறீபாலி வித்தியாலயத்துக்கும் சென்றேன். நான் அரச சேவையில் 1957 ஆம் ஆண்டு சங்கீத ஆலோசகராக இணைந்துகொண்டேன். அதன்பின் சங்கீதத்தை மேலதிகமாக கற்பதற்காக 1960 இல் பாரத தேசத்துக்குச் சென்றேன்.

ஆரம்பத்தில் மேற்கு வங்காலத்திலுள்ள "சாந்தி - நிகேத்தன்" மற்றும் பாரத பல்கலைக்கழகம் என்பவற்றில் சங்கீத வாத்திய டிப்ளோமா ஒன்றையும், அதன் பின்னர் 1965 இல் இருந்து 1968 வரை "லக்னோ பாத்கன்டே" சங்கீதக்கல்லூரியில் சங்கீதம் மற்றும் வாத்திய பட்டப்படிப்புக்கான சான்றிதழையும் பெற்றுக் கொண்டேன். அதுவரை சங்கீத சாஸ்திரத்தில் எவராலும் பெற்றுக் கொண்டிராத கௌரவ ஞானப் பட்டத்தைப் பெற்று இலங்கைக்கு வந்து ஹொரணை சிறீபாலி கலையகத்தில் அதிபராக பதவியேற்றேன்.

**ஹசர:**

அழகியல் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதில் உங்களது பங்களிப்பு எவ்வாறானதாக காணப்பட்டது?

**முதுன்கொடுவ அவர்கள்:**

அதற்கு முன் இலங்கையின் சங்கீதக் கல்வியின் வரலாற்றை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். உத்தர பாரதீய சங்கீதம் பாடசாலைப் பாடவிதானத்தில் சேர்க்கப்பட்டது 1945 ஆம் ஆண்டில் ஆகும். இதுபற்றிப் பேசும் போது கல்வியலாளரான வில்பட் ஏ. பெரேரா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஹொரணை சிறீபாலி கல்விக் கூடத்தை மறக்க முடியாது. அது 1934 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதி விஸ்வ பாரதீய பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகரான குருதேவ் ரவீந்திரநாத் தாகூர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. இது இலங்கையில் அழகியல் பாடத்தைக் கற்பிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட முதலாவது கல்வி நிலையமாகும்.

அக்காலத்தில் இலங்கையில் சங்கீதத்தைக் கற்றுத் தேர்ந்த விற்பன்னர்கள் காணப்படாமையினால், இந்தியாவிலிருந்த சங்கீத விற்பன்னர்கள் ஹொரணைக்கு வரவழைக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதேபோன்று, 1942 ஆம் ஆண்டில் மதுகம மகா வித்தியாலயத்துக்கு முதலாவது அரச சங்கீதப்பாட ஆசிரியராக லயனல் அல்கம அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். 1944 ஆம் ஆண்டில் பாத்கன்டே பல்கலைக்கழகத்தில் சங்கீத வித்துவான் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட லயனல் எதிரிசிங்க அவர்கள் கல்வித் திணைக்களத்துக்கு இணைந்துகொண்டதன் பின்புதான் இலங்கையின் சங்கீதக் கல்வி அபிவிருத்தி அடைந்தது.

1952 ஆம் ஆண்டு அரச சங்கீத நாடன வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டதுடன், இந்த நிறுவனம் 1974 ஆம் ஆண்டில் களனிப் பல்கலைக்கழகத்தின் அழகியல் கற்கை நிலையமாக மாற்றப்பட்டது. அதற்கு நான் நிறையக் சிரமப்பட்டேன். சங்கீதப் பட்டப்படிப்பின் ஆரம்பம் முதல் இரண்டு வருடங்களுக்குமாக சிறிபாலி கலாபீடத்தைத் தெரிவு செய்தது இந்நாட்டின் சங்கீதக் கல்விக்கு அடிப்படையாக இருந்த காரணத்தினால், அதற்கு மரியாதை செய்யும் நிமித்தமாகும். அதனடிப்படையில் நான் களனிப் பல்கலைக்கழகத்தின் அழகியல் கற்கைகள் பீடத்தின் சிரேஸ்ட விரிவுரையாளரானேன்.

பாத்கன்டே சங்கீதக் கல்வியியல் கல்லூரியின் கிளையொன்று இலங்கையில் நிறுவப்பட்டதன் பின்புலத்தில், சுவாரஸ்யமான கதையொன்றுள்ளது. நாம் இது பற்றி வினவியது கலாநிதி முதுன்கொடுவ அவர்களின் திறமையான மாணவர்களுள் ஒருவரான, இன்று அழகியல் கற்கைகள் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளரான பானு திஸாநாயக்க அவர்களிடம்.

முன்னைய காலங்களில் வித்துவான் பரீட்சைக்காக ஒவ்வொருவருக்கும் இந்தியாவுக்குச் செல்ல வேண்டிய நிலை இருந்தது. அதற்கு நிறைய செலவுகளும் ஏற்பட்டன. இதனால், எல்லோராலும் இந்தப் பரீட்சையை எழுத முடியவில்லை. எனினும், கலாநிதி பிரேமதாச அவர்கள் இந்திய அரசுடன் கலந்துரையாடி லக்னோ பாத்கன்டே கல்வியியல் கல்லூரியின் கிளையை இலங்கையில் நிறுவ நடவடிக்கை எடுத்தார்.

இது ஒரு தேசிய வேலைத்திட்டமாக கருத முடிகின்றது. ஏனெனில், இது அரச தலையீட்டுடன் செயற்பட வேண்டிய ஒரு செயற்பாடாகும். தனியொருவராக அவர் அந்த சவாலை ஏற்றுக் கொண்டார். அதன் பயனாக நீலா விக்ரமசிங்க மற்றும் நான் உட்பட இந்த நாட்டிலேயே பலருக்கு சங்கீத வித்துவான் பரீட்சை வரை படிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

இதற்கான முதலாவது பரீட்சை இந்தியாவில் நடைபெறும் அதேநேரத்தில், இலங்கையிலும் மாலை நேரத்தில் ஆரம்பமானது. குறைந்த வசதிகளுடனானதாக காணப்பட்டாலும் இப்பரீட்சையானது பரீட்சை விதி முறைகளைப் பேணியதாக நடைபெற்றது. இந்தப் பரீட்சை இலங்கையில் நடைபெற்றதனால் நாட்டில் சங்கீதப் பாடம் தொடர்பான பெறுமளவிலான விளக்கமொன்று ஏற்பட்டது.

1979 ஆம் ஆண்டு சிறீபாலி கலாபீடம் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டதனால், பாத்கன்டேயின் இலங்கைக்கான கிளையாக சிறிபாலி கலாபீடத்தை தொடர்ந்தும் நடாத்த முடியாமல் போனது. பின்னர் அது "எரந்ததி" கலைக்கூடம் என்ற பெயரில் ஹொரணையில் நடாத்தப்பட்டு வந்தது. இன்றும் அது பாத்கன்டே சங்கீத வித்தியாலயம் என்ற பெயரில் கொட்டாவையில் நடைபெறுகின்றது.

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட சிறிபாலி மண்டபம் 2005 இல் முழுமையான ஒரு பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு இன்று அது அழகியல் கற்கைகளுக்கான பல்கலைக்கழகமாக மிளிர்கிறது.

முதுன்கொடுவ அவர்கள் ஹொரணைக்குப் பொறுப்பான அதிகாரியாகவும் கல்விப் பிரிவின் பிரதானியாகவும் செயற்பட்டார். இலங்கையின் கல்வித் துறை இன்றுள்ள உயர்ச்சியை எட்டுவதற்கு கலாநிதி பிரேமதாச முதுன்கொடுவ அவர்கள் அளப்பரிய சேவையாற்றியுள்ளார்.

**ஹசர:**

பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளராக இருக்கின்ற நீங்கள் இன்று சங்கீத பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு கூறும் செய்தி என்ன?

சங்கீதம் என்பது முழுமையான செயற்பாட்டுடன் கூடிய ஒரு பாடமாகும். இதற்கு குறுக்கு வழிகள் கிடையாது. சப்தப் பயிற்சித் துறை பற்றி விளங்கிக் கொள்வது மிக அவசியமானது. எவ்வளவுதான் பரீட்சைகளில் சித்தியடைந்தாலும் இவைகள் தொடர்பில் விளக்கமின்றி இத்துறையில் நிலைத்திருப்பது முடியாத ஒன்றாகும்.

தொழில் வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்ற, சிறந்த பொருளாதாரப் பலத்தை அடைந்துகொள்ள முடியுமான ஒரு பாடமாக இது அமைந்துள்ளது. முன்னைய காலங்களைப் போன்றல்லாது இன்று சங்கீதத் துறையுடன் தொடர்பானவர்களுக்கு நல்ல சமூக அங்கீகாரமும் பொருளாதார ஸ்தீரத் தன்மையும் காணப்படுகின்றது. இதுவரையில் இந்தத் துறையை முன்னேற்றுவதற்குப் பாடுபட்ட முன்னாள் சங்கீத மேதைகள் அனைவரும் கௌரவத்துடன் நினைவூட்டப்பட வேண்டியவர்கள் என்பது மிக முக்கியமான விடயமாகும். அதேபோன்று, சமகால சந்ததியினர் அவர்கள் பற்றி அறிந்திருப்பதும் மிக அவசியமானதாகும்.

சங்கீத நிபுணர் கலாநிதி பிரேமதாச முதுன்கொடுவ அவர்கள் அந்த வகையில் அதி விசேடமான ஒரு பாத்திரமாவார். ஹிந்தி, வங்காளம், ஆங்கிலம், சிங்களம் போன்ற



மொழிகள் தொடர்பில் சரளமான அறிவுள்ள அவர், கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டமொன்றையும் பெற்றுள்ளார். அதேபோன்று, "சம்பாவிய சங்கீத பிரவேசிகா" உட்பட பல்வேறு நூல்களுக்கு அவர் சொந்தக்காரராவார்.

அத்துடன், சங்கீத விருது வழங்கும் விழாவில் உத்திர பாரதீய சங்கீதத் துறைக்கு வழங்கப்படுகின்ற கலாநிதி லயனல் எதிரிசிங்க நினைவுச் சின்னம் சங்கீத மேதை பிரேமதாச முதுன்கொடுவ எனும் சிறப்புமிக்க கலைஞருக்கு வழங்கப்பட்டது.

86 வருடங்கள் நிரம்பிய இந்த மா மனிதர் இன்றும், பாத்கன்டே சங்கீத வித்தியாலயத்தின் அதிபர் என்ற வகையில் ஒவ்வொரு வருடமும், சங்கீத வித்துவான் பரீட்சை வரை நடைபெறும் சகல பரீட்சைகளையும் நடாத்திக் கொண்டு ஏனைய நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அவ்வித்தியாலயத்தை மத்திய நிலையமாகவும் ஆக்கிக் கொடுத்து வழங்கி வரும் சேவை அளப்பரியது.

ஹஸர நாங்களும் அவருக்கு நீண்ட ஆயுளை வேண்டிப் பிரார்த்திப்போம்.



**– எரந்ததீ ரந்தெனிய –**
தொழில் வழிகாட்டல் அதிகாரி,
மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

# ஹசர

**தொழல் உருவாக்கம், ஊக்குவிப்பு மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவின் நிகழ்ச்சித் திட்டங்கள்**

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள விரும்பினால் உங்களது விபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவம் ஒன்றை கீழ் வரும் முகவரிக்கோ அல்லது மாவட்ட செயலகத்தில் அமையப் பெற்றுள்ள மத்திய நிலையத்திடமோ ஒப்படையுங்கள்.

- ☞ உயர் தரம் மற்றும் சாதாரண தர பாடசாலை மாணவர்களுக்கான “வாழ்க்கைக்கான சரியான தீர்மானம்” தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி
- ☞ பட்டதாரி மாணவர்களுக்கான “நீங்கள் ஆச்சரியமானவர்கள்” தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி (உள்வாரி, வெளிவாரி மாணவர்களுக்கானது)
- ☞ ஆசிரியர்களுக்கான தொழில் வழிகாட்டல் அறிவூட்டல் நிகழ்ச்சி
- ☞ பெற்றோர்களுக்கான தொழில் வழிகாட்டல் அறிவூட்டல் நிகழ்ச்சி
- ☞ சுய தொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சி
- ☞ தொழிற் பாதைகள் அறிமுக நிகழ்ச்சி
- ☞ தொழில் ஆலோசனை சேவை வழங்குதல்
- ☞ தனியார் துறையில் தொழில்களில் சேர்த்தல் நிகழ்ச்சி
- ☞ சுதந்திரமான தொழில்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சி
- ☞ தொழில் சமூக நிகழ்ச்சி
- ☞ முயற்சியாண்மை அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சி
- ☞ தேவைகளை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சிகள்

தொழில் உருவாக்க விருத்தி மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு,
மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்
இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
09 ஆவது மாடி, செத்சிரிபாய, இரண்டாம் கட்டம், பத்தரமுல்லை
தொலைபேசி : 0112187134
ஹசர மத்திய நிலையம் - 0112186167





*‘ஒரு மனிதன் பலமானவனாக ஆவது*
*தனது உடம்பினால் அல்ல,*
*அவனுள் காணப்படும்*
*உறுதியான*
*தன்நம்பிக்கையினாலேயே*
*ஆகும்’*

*- மகாத்மா காந்தி -*


தொழில் உருவாக்க விருத்தி மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு,
மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்
இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
09 ஆவது மாடி, செத்சிரிபாய, இரண்டாம் கட்டம், பத்தரமுல்லை
தொலைபேசி : 0112186367 /0112187134